
புதன்பொய்கை




Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 77

புதன்கிழமை
11 பெப்ரவரி 2026

தை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50


## 22 கிலோ கஞ்சாவுடன் இளைஞர்கள் கைது

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, பெப். 11
22 கிலோ கஞ்சாவைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் வவுனியா பொலிஸாரால் இரண்டு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போதைத்தடுப்புப் பொலிஸா

»15

சமிக்ஞையை மீறிப் பயணித்த ஹைஏஸ் மீது

# பொலிஸார் துப்பாக்கிச் சூடு 17வயதேயான சாரதி சாவு

யாழ்ப்பாணத்தில் பயங்கரம்



யாழ்ப்பாணம், பெப். 11
சமிக்ஞையை மீறி அதிவேகமாகப் பயணித்த ஹைஏஸ் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், அந்த வாகனத்தைச் செலுத்திய 17 வயது நபர் தலையில் தோட்டா பாய்ந்து உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் வேலணை அல்லைப்பிட்டி பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
அல்பினோ அருள் பயஸ் (வயது -17) என்ற

»15

ஜ.த.தே.கூட்டணியின்

## பேராளர் மாநாடு பெப். 22

யாழ்ப்பாணம், பெப். 11
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் கூட்டணியின் சார்பில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு

»15

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகம்

## உயர்மட்ட விசாரணையை முன்னெடுப்பதற்குத் தயார்

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 11
வேலணை அல்லைப்பிட்டிப் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 17 வயதுச் சாரதி உயிரிழந்த விடயத்தில் உயர்மட்ட விசாரணைகளை மேற்கொள்ளத் தயார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும்,

»15

# கிவுல் ஓயா திட்டத்தை கைவிடவே மாட்டோம்

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



**கொழும்பு, பெப்ரவரி 11**
**கிவுல் ஓயா திட்டம் மக்களுக்கானது. எக்காரணம் கொண்டும் அந்தத் திட்டம் கைவிடப்படாது இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ திட்டவட்டமாக அறிவித்தார்.**

»15

## குமாரபுரம் படுகொலை; நினைவேந்தல் இன்று!

திருமலை, பெப். 11
திருகோணமலை மூதூர் குமாரபுரம் படுகொலைகளின் 30ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணியளவில் குமாரபுரம் பகுதியில்

»15

## சான்றுப்பொருள்கள் பொலிஸார் சோடிப்பு

உறவினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 11
அல்லைப்பிட்டி துப்பாக்கிச் சூட்டின் பின்னர் பொலிஸாரால் சான்றுப் பொருள்கள் சோடிக்கப்பட்டுள்ளன என்று உயிரிழந்த நபரின் உறவினர்கள் குற்றஞ்

»15

## அல்லைப்பிட்டி மரணத்துக்கு பொலிஸாரே முழுக்காரணம்!

சிரேஷ்ட சட்டத்தரணி சிறீகாந்தா கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 11
அல்லைப்பிட்டி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பந்தப்பட்ட பொலிஸாரின் கண்மூடித்தனமான நடவ

»15



“மறிக்க மறிக்க நிக்காமல் ஓடினதும் பிழைதான்.
நிக்காமல் ஓடினவரை பிடிக்காமல் சுட்டுக்கொண்டதாம்.
பிழைதான் கண்டியளோ”

முச்சந்தி முரளி

## தலைவர் பிரபாகரன் வாழ்ந்த இல்லத்தில் அருங்காட்சியகம் அமைப்பதே பொருத்தம்

வல்வெட்டித்துறை நகரசபை பரிந்துரை

யாழ்ப்பாணம், ஜனவரி 30
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணியில், அருங்காட்சியம் ஒன்றை அமைப்பதே பொருத்தமாக இருக்கும் என்று, காணியின் உரிமையாளரான தலைவர் பிரபாகரனின் சகோதரிக்கு வல்வெட்டித்துறை நகரசபை அறிவுறுத்தியுள்ளது.
தலைவர் பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணியில் புதிய கட்டடம் ஒன்றை

»15

புத்தர்சிலை விவகாரம்

## தேரர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்குக!

திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, பெப். 11
திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேரர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, திருகோணமலை சங்கமித்தை விகாரைக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

»15

## துப்பாக்கியுடன் வந்தவரால் மருதனார்மடத்தில் பதற்றம்

யாழ்ப்பாணம், பெப். 11
மருதனார்மடம் சந்தைக்குள் துப்பாக்கியுடன் நடமாடிய நபரால் நேற்றுப் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.
இதன் பின்னர் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அந்தத் துப்பாக்கி போலித் துப்பாக்கி என்றும், அதைக் கொண்டுசென்றவர் மன நலம் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரியவந்தது.

»15

பிரபாகரனின் ஒளிப்படத்தை பிரசுரித்தமைக்காக

## உதயன் குழுமத்தலைவர் சரவணபவனுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை நேற்று நீக்கம்!

அநுர அரசிலும் ஊடகங்கள் மீது அடக்குமுறை

யாழ்ப்பாணம், பெப். 11
விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்தை பத்திரிகையில் பிரசுரம் செய்த வழக்கில், உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவனுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை

»15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

11.02.2026 புதன்கிழமை

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 10.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4343 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 17 21 38 58 |
| விசே. எழுத்து | P |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 10.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1410 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 35 46 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 10.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0369 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 4 6 6 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 10.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2449 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 43 47 58 70 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 10.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6101 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 4 9 0 6 2 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 10.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2131 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 05 27 50 54 |
| விசேட எழுத்து | L |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 10.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0217 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 25 41 51 |

# மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு எச்சரிக்கை!

**கொழும்பு, பெப்.11**

**தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்காவிட்டால் எந்தவித முன்னறிவிப்பும் இன்றித் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.**

இலங்கை மின்சாரசபையைக் கலைப்பதற்கான திகதி வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும். ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான 8 முக்கியமான கோரிக்கைகள் அடங்கிய கடிதம் கடந்த ஜனவரி 12ஆம் திகதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதுவரையில் அந்தக் கோரிக்கைகளுக்கு எவ்வித சாதகமான பதில்களும் கிடைக்கப்பெறவில்லை. ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு முறையான தீர்வு வழங்கத் தவறினால் மீண்டும் ஒரு அறிவித்தல் வழங்கப்படமாட்டாது. உடனடியாகப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 10.02.2026 | செவ்வாய்க்கிழமை | 0809 | G | 1 7 7 7 2 6 |

## Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 10.02.2026 | செவ்வாய்க்கிழமை | 3075 | O | 03 04 13 67 |

## சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2026 | செவ்வாய்க்கிழமை | Z | 08 13 37 42 | 5236 |

## SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 10.02.2026 | செவ்வாய்க்கிழமை | 0905 | 32 43 44 |

## லக்ன ராசி

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2026 | செவ்வாய்க்கிழமை | | 10 23 43 44 | 4787 |

## KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 10.02.2026 | செவ்வாய்க்கிழமை | Q | 19 | 28 51 58 62 | 2251 |

## அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.02.2026 | செவ்வாய்க்கிழமை | A | 16 25 42 45 | 2901 |

# மாற்றாற்றல் மாணவர்களுக்கு பல்கலையில் விசேட வசதிகள்

## 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு,பெப்.11

இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும் விசேட தேவையுடைய மாணவர்களை அனுமதிப்பதற்கும், அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும் 1.5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு சில பல்கலைக்கழகங்களில் மட்டுமே விசேட தேவையுடைய மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இனிவரும் காலங்களில், அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் கலை போன்ற பாடத் துறைகளிலும் அவர்களை இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. விசேட தேவையுடைய மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் இலகுவாக நடமாடுவதற்கும், கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தேவையான நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும். பல்கலைக்கழகங்களின் விடுதி மற்றும் தங்குமிட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மாணவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன், பாதுகாப்பான சூழலும் உறுதி செய்யப்படும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)



# ஈரான் நாட்டவர் கைது

கொழும்பு, பெப்.11

நாட்டுக்குள் வெளிநாட்டுச் சிகரெட்டுகளைக் கடத்திவர முயன்ற ஈரான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேகநபரான ஈரான் நாட்டுப் பிரஜையின் பயணப் பொதிகளில் இருந்து 36 ஆயிரத்து 860 வெளிநாட்டுச் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி 55 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா என விமானநிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# கோத்தாபயவுக்கு சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு,பெப்.11

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை எதிர்வரும் 13ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கொழும்புக்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டுத்தொகுதிக்குச் சொந்தமான பல வீடுகளை பல நபர்களுக்கு சட்டவிரோதமாக ஒதுக்கியதை அங்கீகரிக்கும் கடிதங்கள் வெளியிடப்பட்டது குறித்து வாக்குமூலம் பெறவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது இந்தச் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தமிழ்க்கட்சிகளின்

# ஒற்றுமை முயற்சியில் சறுக்கல் சுவிஸ் தூதரகம் அதிருப்தி

கொழும்பு,பெப்.11

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒருமித்த அரசியல் தீர்வை எட்டுவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் திரட்ட சுவிட்ஸர்லாந்து தூதரகம் எடுத்த விசேட முயற்சி, தற்காலிகமாகக் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகம் எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதி அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து ஒரு முக்கியமான சந்திப்பை நடத்தத் திட்டமிட்டிருந்தது. சத்தம் சந்தடியின்றி, மிக இரகசியமான முறையில் இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்கத் தூதரகம் விரும்பியது.

இந்த இராஜதந்திர முயற்சி இடைநிறுத்தப்பட்டதற்கு இரண்டு முக்கியமான காரணங்களாக, சுவிஸ் தூதரகத்தின் கூட்டத்தில் பங்கேற்கவிருந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் உள்ளடங்கிய தமிழ்த் தேசியப் பேரவை, அதே போன்றதொரு கூட்டத்தை 19ஆம் திகதிக்கு முன்னதாகவே எதிர்வரும்15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்த முயற்சி எடுத்தது. இதில் பல சிவில் அமைப்புகளையும் அவர்கள் அழைத்திருந்தனர்.

மிகவும் இரகசியமாக வைக்கப்படவேண்டிய இந்த இராஜதந்திர முயற்சி தொடர்பான செய்திகள் ஊடகங்களில் விலாவாரியாக வெளியானமை சுவிஸ் தூதரகத்தைப் பெரும் விசனத்துக்குள்ளாக்கியது.

இதன் விளைவாக, தற்போதைய சூழலில் இத்தகைய சந்திப்பை முன்னெடுப்பது சாத்தியமில்லை எனத் தூதரக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அறியவருகிறது. (ச-இ)

# யாழில் கடும் குளிர்

யாழ்ப்பாணம், பெப்.11

சீரற்ற காலநிலை காரணமாக, பகல், இரவு கடும் குளிரான காலநிலைமை நீடித்துவருகின்றது. இதனால் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக குழந்தைகள் சளித்தொற்றுக்கு உள்ளாகிவருகின்றனர். சளித்தொற்று மேலும் அதிகரிப்பதால் குழந்தைகள், முதியவர்கள் சுவாசப்பாதிப்புகளுக்கு உள்ளாகிவருகின்றனர். இது தவிர காய்ச்சல், தலையிடி, உடற்சோர்வு போன்ற நோய்களும் வயது வேறுபாடு இன்றி தாக்கிவருகின்றது. குளிர் அதிகமாக இருக்கும் நேரங்களில், அநாவசியமாக வெளியிட பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று சுகாதாரத்தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். (க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரச சொத்து இருப்பு ஜனவரி மாதம் சரிவு!

**கொழும்பு, பெப்.11**
**இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட தரவுகளின்படி இலங்கையின் அதிகாரபூர்வ இருப்பு சொத்துகள் கடந்த ஜனவரி மாதம் 0.2 வீதம் சரிவடைந்துள்ளது.**

கடந்த ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் 6,838 மில்லியன் அமெரிக்க டொலராகவிருந்த சொத்துகளின் மதிப்பு கடந்த ஜனவரி மாத இறுதிக்குள் 6,824 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது. அதிகாரபூர்வ கையிருப்பின் மிகப்பெரிய அங்கமான அந்நியச் செலாவணி இருப்பு இந்த மாதத்தில் ஒரு வீதம் குறைந்து 6,747 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 6,680 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது என்றும் மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## இலங்கைக்குப் புதிய பணிப்பாளரை நியமித்தது ஆசிய அபிவிருத்தி வங்கி

கொழும்பு, பெப்.11
இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் புதிய பணிப்பாளராக ஷானன் கோவ்லின் நியமிக்கப்பட்டுள்ளார். ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பணியாற்றிய 13 ஆண்டுகள் உட்பட, கோவ்லின் 26 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவம் கொண்ட ஒரு அதிகாரியாவார்.
வலுசக்தி, காலநிலை, சுற்றுச்சூழல், காற்றின் தரம், பொதுச்சுகாதாரம் மற்றும் உணவு, நீர் ஆகிய துறைகளில் முதலீட்டுத் திட்டங்களின் செயற்பாடுகள் மற்றும் கொள்கை விடயங்களில் அவர் நிபுணத்துவம் பெற்றவர்.
ஆசிய அபிவிருத்தி வங்கியில் இணைவதற்கு முன்னர், அமெரிக்காவின் தேசிய மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆய்வகத்தில் மேலாளராகப் பணியாற்றிய அவர், அங்கிருந்து அமெரிக்கா இந்தியா மற்றும் தெற்காசிய பிராந்திய வலுசக்தி ஒத்துழைப்பு முயற்சிகளை வழிநடத்தியுள்ளார். (ச-இ)

## 103 குற்றவாளிகளுக்கு சிவப்பு அறிவிப்புகள்!




வெளிநாடுகளில் தற்போது வசிக்கும் 103 குற்றவாளிகளை மீண்டும் அழைத்துவர இன்டர்போல் மூலம் சிவப்பு அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் எப்.யு. வூட்லர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
தேடப்படும் நபர்களில் 3 பேர் இந்த ஆண்டு ஏற்கனவே நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். அதேவேளை குற்றங்களைச் செய்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற குற்றவாளிகளின் 50 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## மேலதிக வகுப்புக்குத் தடை

கொழும்பு, பெப்.11
2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையுடன் தொடர்புடைய அனைத்து மேலதிக வகுப்புகளும் இன்று நள்ளிரவு முதல் தடை செய்யப்படுகின்றது என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.
பரீட்சை நிறைவடையும் வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்கும். பாடங்கள் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் அனைத்து விதமான விளம்பர நடவடிக்கைகளுக்கும் தடை செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எஇ)



## டித்வா புயல் நிவாரணத்துக்காக 500 மெ.தொ. அரிசி நன்கொடை

கொழும்பு, பெப்.11
டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மியன்மார் இலங்கைக்கு 500 மெற்றிக் தொன் அரிசியை நன்கொடையாக வழங்கியுள்ளது.
இலங்கைக்கான மியன்மார் தூதுவர் மார்லர் தான்ஹ்டாய்க், இந்த அரிசியை நேற்றுமுன்தினம் வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் கையளித்துள்ளார். இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மியன்மார் நிதியுதவியை வழங்கியிருந்த நிலையில், தற்போது இந்த அரிசித் தொகையையும் கையளித்துள்ளது. (எ-இ)

## அலங்காரச் செடிகளுடன் இளைஞர் கைது

கொழும்பு, பெப்.11
சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 6 இலட்சம் ரூபா பெறுமதியான அலங்கார மலர்ச் செடிகளுடன் இலங்கைப் பயணி ஒருவர் நேற்று அதிகாலை சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரின் பயணப் பொதிகளில் இருந்து 386 அலங்கார மலர்ச் செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## விளையாட்டும் வினையும் –1

**கண் பார்த்ததைக் கை செய்யிற பழக்கம் சின்னப்பிள்ளையளிட்டக் கூடுதலா இருக்கும். அப்பிடிக் கண்பார்க்கிற நல்லதையும் செய்வினம், கெட்டதையும் செய்வினம். அதில எது நல்லது, எது கெட்டது எண்டு பெத்தவையும், படிப்பிக்கிறவையும் எடுத்துச்சொல்லாட்டி பிள்ளையள் கஷ்டப்படவேண்டியிருக்கும். பெரியாக்கள் சிகரெட், பீடி, சுருட்டுப் பத்திறதைப் பாத்த சின்னப்பெடியள் தாங்களும் பேப்பரைச் சுருட்டி, அதில நெருப்பை மூட்டி பீடி குடிச்சு விளையாடுறதைப் பார்த்திருப்பியள். அப்பிடி ஒரு விளையாட்டு பிள்ளையளின்ர எதிர்காலத்துக்கே ஆப்பு வைச்ச சம்பவம் ஒண்டு கிட்டடியில யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில நடந்திருக்குது.**

**இப்பத்த இளம்பெடிபெட்டையளிட்ட விதம் விதமா பச்சைகுத்துறது ஒரு 'பஷனா' இருக்குது. அப்பிடி பச்சை குத்துற கடையளும் சந்திக்குச் சந்தி முளைச்சுக் கொண்டு இருக்குது. தங்கட அண்ணா, அக்கா, சொந்தக்காரப் பெரியண்ணைமார் பச்சை குத்தியிருக்கிறதைப் பார்த்துச் சின்னப்பெடிபெட்டையளுக்கு 'நாங்களும் இப்பிடிப் பச்சை குத்தினால் என்ன?' எண்ட ஒரு ஆசை வரும்தானே. அப்பிடி ஆசைப்பட்டாலும், அவையள் போய் பச்சை குத்த ஏலாது. வீட்டுக்காரரும் விடாயினம், கடைக்காரரும் சின்னப்பிள்ளையளுக்கு பச்சை குத்தமாட்டினம். அப்ப அவையள் பேப்பரில பீடி குடிக்கிற மாதிரி, பேனை மையை வைச்சு தாங்களும் பச்சை குத்தி விளையாட வெளிக்கிட்டிருக்கினம். பேனை மையை மேசையில ஊத்திப்போட்டு, சட்டைக்குக் குத்திற ஊசியின்ர நுனியில அந்த மையை எடுத்து, அப்பிடியே தோலில தங்களுக்குப் பிடிச்ச டிசைனில குத்துவினம். அப்ப ஊசியோட சேர்ந்து பேனை மையும் உள்ளுக்க போடும். பிறகு அந்த டிசைனுக்கு ஏத்தபடி தேவையான மையை ஊசியால இன்னும் அதுக்க குத்து குத்தெண்டு குத்தி உள்ளுக்க தள்ளிப்போடுவினம். பாக்கிறதுக்கு அப்பிடியே பச்சை குத்தினமாதிரி இருக்கும். தங்களுக்குப் பிடிச்ச ஆக்களின்ர பேர், இதயம் மாதிரி டிசைன்கள் எண்டு இந்தப் பேனை மை பச்சைகுத்தல் இப்ப பள்ளிக்கூடங்களில கொரோனா மாதிரிப் பரவிக்கொண்டுவருகுதாம்.**

**ஆனால் இந்தப் பேனை மையும் லேசில அழியாது. அப்பிடியே அதுவும் தோலோட சேர்ந்து அழியமாட்டன் எண்டு அடம்பிடிக்கும். சிலவேளை அந்தப் பேனை மை அழிய வருசக்கணக்கும் எடுக்கும். பச்சை குத்தினால் எப்பிடி அழியாமல் இருக்குமோ அதைமாதிரி பேனைமைப் பச்சையும் அழியாமல் இருக்கிறதால அந்தப் பிள்ளையள் உண்மையாவே பச்சை குத்திப் போட்டினம் எண்டு பெற்றாரும், ரீச்சர்மாரும் பிழையா நினைச்சு வெளுவை குடுத்த சம்பவங்களும் கனக்க நடந்திருக்குது. சில பள்ளிக்கூடங்களில இப்பிடிப் பேனை மைப் பச்சை குத்திற 'ஸ்பெசலிஸ்ட்டான' பெடிப்பிள்ளையளும் இருக்கினமாம். அவையள் தான் மற்றப் பிள்ளையளுக்கு, ரீச்சர்மார் வராத பாடநேரங்களில இந்தப் பேனை மைப் பச்சையைக் குத்திவிடுகினமாம். விளையாட்டா நடக்கிற இந்தப் பேனை மைப் பச்சை குத்தினதால பள்ளிக்கூடப் பிள்ளையொண்டுக்கு என்ன சிக்கல் வந்ததெண்டு நாளைக்குப் பாப்பம்.**

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ். பல்கலைக்கழக பீடம்




## கட்டுமானப்பணிகள் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், பெப்.11**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியில் எல்லைகளை இட்டு வேலி அமைக்கும் பணிகளையும், முதற்கட்டக் கட்டுமானப் பணிகளையும் ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ். சுண்டுக்குளியிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த முடிவு எட்டப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பல்கலைக்கழகக் காணி தனிநபர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றது என்று எழுந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த அவசரச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட 44 ஏக்கர் காணியை உடனடியாக அளவீடு செய்து, ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் வகையில் வேலி அமைக்கும் பணிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஆரம்பிக்கவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விசேட நிதி ஒதுக்கீட்டிலிருந்து, பல்கலைக்கழகத்தின் ஆரம்பகட்ட கட்டுமானப் பணிகளுக்காக ஒரு தொகுதி நிதியை வழங்க மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

வேலி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்டச் செயலகத்தின் நிதி உதவியுடன் முதற்கட்டக் கட்டட நிர்மாணப் பணிகள் படிப்படியாக முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கலந்துரையாடலின் போது வவுனியாப் பல்கலைக்கழகம் மன்னாரில் தமது பீடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-66)

# தரிசன யாத்திரை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.11

இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு பஞ்ச ஈஸ்வரங்களுக்கான தரிசன யாத்திரை இன்று 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இன்று காலை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிவநடனம், பூஜை மற்றும் பஜனை வழிபாடுகளுடன் யாத்திரை ஆரம்பமாகும்.

நகுலேஸ்வரத்திலிருந்து புறப்படும் சிவலிங்கம் தாங்கிய ஊர்தி, திருகோணமலை திருக்கோணேஸ்வரம், மட்டக்களப்பு தான்தோன்றீஸ்வரர், சிலாபம் முன்னேஸ்வரம் ஆகிய ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகள் நடத்தப்படும் யாத்திரை இறுதியாக மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தைச் சென்றடையும். அங்குள்ள பாலாவி தீர்த்தக் கேணியில் புனித நீராடி, சிவலிங்கப் பெருமானுக்கு அடியார்கள் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்து வழிபாடுகளை நிறைவு செய்வர்.

யாத்திரையில் கலந்துகொள்ளும் அடியார்கள் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலாசார உடைகளை அணியவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச)

# பனை அபிவிருத்திச்சபை வேலைத்திட்ட ஆராய்வு

யாழ்ப்பாணம்,பெப்.11

பனை அபிவிருத்திச் சபையின் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று யாழ்ப்பாணத்தில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார். 2025ஆம் ஆண்டில் பனை அபிவிருத்திச் சபையால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தற்போதைய நிலைகள் தொடர்பில் பிரதி அமைச்சர் ஆராய்ந்தார்.

2026ஆம் ஆண்டில் பனை வளத்தைச் சார்ந்து முன்னெடுக்கப்படவுள்ள புதிய உற்பத்தித் திட்டங்கள், நவீன தொழில்நுட்ப அறிமுகம் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனைகளும் நடத்தப்பட்டன.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பனை தென்னை வள உற்பத்தியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-17)

# வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர்

வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் புதியதலைவராக க.பிரகாஸ் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்குமாகாண ஆளுநர்செயலகத்தில் வைத்து வடக்குமாகாண ஆளுநரால் அவருக்கான நியமனக் கடிதம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. (ச-66.113,17)

# பருத்தித்துறை நகரத்தின் அபிவிருத்திகள் ஆராய்வு

பருத்தித்துறை நகரில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக, நகர அபிவிருத்தி அதிகார சபையினர், பருத்தித்துறை நகரசபையினருடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடினர். யாழ்.மாவட்டத்துக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில், பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் ஏலவே தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்கு, நகர சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும், தெளிவுபடுத்தலுக்காகவும் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. பருத்தித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும்போது, அதில் மீனவர்களுக்கு ஒரு பகுதி மற்றும் பொருள்களை ஏற்றி இறக்கக்கூடிய பகுதி என பல்துறை நோக்கம் கொண்டதாக அமைக்கவேண்டும். அத்துடன் வாடி வீட்டை முன்னிலைப்படுத்தி அபிவிருத்தி செய்யவேண்டும் என்று நகரசபை தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதுதொடர்பில் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று அதிகார சபையினர் தெரிவித்தனர்.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணத் திட்டமிடல் பணிப்பாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் திட்டமிடல் குழுவினர் பங்கேற்றனர். (க-100)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** இன்று மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள்மூலம் சில சங்க டங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப் போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசி யம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்புக் கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். பிள்ளைகள்வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** தந்தையால் ஆதாயம் கிடைக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அவருடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். அவ்வப்போது சற்று சோர்வு உண்டாகும். உறவினர்கள் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டு இருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள்மூலம் ஆதாயம் உண் டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இன்னுமொரு இனவாதம்

இலங்கைத்தீவின் வரலாற்றுப் பக்கங்களில் இருந்து தமிழ் அடையாளங்களை வேரோடு பிடுங்கி எறியும் ஒரு திட்டமிட்ட நகர்வு, 'சிங்கள பாதுகாப்புச் சம்மேளனம்' என்ற அமைப்பின் ஊடாகத் தற்போது அரங்கேறத் தொடங்கியிருக்கின்றது. தரம் 6 மற்றும் தரம் 10 வரலாற்றுப் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள யாழ்ப்பாண இராசதானி மற்றும் சங்கிலிய மன்னன் குறித்த வரலாற்று உண்மைகளைச் சவாலுக்கு உட்படுத்தி, அந்தச் சிங்கள அமைப்பு கல்வி அமைச்சுக்கு அனுப்பிய கடிதம் அப்பட்டமான இனவாத அரசியலையே பறைசாற்றுகிறது. சங்கிலியன் ஒரு தமிழ் மன்னன் அல்ல என்றும், யாழ்ப்பாண இராசதானி என்ற ஒன்றே இருக்கவில்லை என்றும் அந்த அமைப்பு முன்வைக்கும் வாதங்கள், பல தசாப்தங்களாக உள்நாட்டு மற்றும் சர்வதேச வரலாற்று ஆய்வாளர்களால் நிருபிக்கப்பட்ட ஆதாரங்களை எள்ளி நகையாடுவதாக உள்ளன. போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது தமிழர்கள் இங்கு இருக்கவில்லை என்று கூறுவது, ஆவணப்படுத்தப்பட்ட ஐரோப்பியக் குறிப்புகளையும் தொல்பொருள் சான்றுகளையும் குப்பைத்தொட்டியில் வீசுவதற்குச் சமமானதாகும்.

ஒரு சாதாரண அமைப்பின் ஆதாரமற்ற வதந்திகளுக்கு மதிப்பளித்து, அதுகுறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையிடம் கல்வி அமைச்சுநிபுணத்துவக்கருத்துகளைக்கோரியிருப்பது, அரசாங்கம் இந்த வரலாற்றுத் திரிவுவாதத்திற்குத் துணைபோகிறதோ என்ற நியாயமான அச்சத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது. சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சிபுரிந்த மன்னர்களையும், பரந்துவிரிந்திருந்த நிர்வாகக் கட்டமைப்புகளையும் ஒரு பேனா முனையால் அழித்துவிட முடியாது. கைலாயமாலை, வையாபாடல் மற்றும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற வரலாற்று நூல்கள் ஒருபுறமிருக்க, போர்த்துக்கேயத்தளபதி பிலிப் டி ஒலிவேராவின் நேரடிச்சமர் குறிப்புகளும், யாழ்ப்பாண அரசர்களின் நாணயங்களும் இன்னும் பல ஆதாரங்களும், யாழ்ப்பாண இராசதானியின் கட்டுமான எச்சங்களும் வரலாற்றின் சாட்சிகளாக உயிருடன் இருக்கின்றன. இந்த ஆதாரங்களை மறைத்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட இனத்தின் பூர்வகுடி வரலாற்றை மட்டும் முன்னிலைப்படுத்த முயல்வது எதிர்காலச் சந்ததியினருக்கு விஷமூட்டப்பட்ட வரலாற்றைக் கற்பிக்கும் ஒரு நச்சுச் செயலாகும்.

கல்வி என்பது உண்மைகளைத் தேடுவதாக இருக்கவேண்டுமே தவிர, அரசியல் நிகழ்ச்சிநிரல்களுக்கு ஏற்ப வரலாற்றைத் திருத்தி எழுதும் கருவியாக மாறக்கூடாது. ஏற்கனவே இலங்கையில் கல்வித்துறையானது பல்வேறு சந்தர்ப்பங்களில் இனவாதக் கருத்துகளால் கறைபடிந்துள்ள நிலையில், தற்போது பாடநூல்களில் இருந்து தமிழ் மன்னர்களின் பெயர்களையும், இராசதானிகளையும் நீக்க முற்படுவது நல்லிணக்கத்துக்கான பாதையை முற்றுமுழுதாக மூடிவிடும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர், இந்த விவகாரத்தில் பாரபட்சமற்ற, ஆதாரபூர்வமான நிபுணத்துவக் கருத்துகளை வழங்கி வரலாற்று உண்மைகளைத் தற்காக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அரசாங்கம் இத்தகைய உணர்வுபூர்வமான விடயங்களில் பேரினவாத அமைப்புகளின் அழுத்தங்களுக்குப் பணியாமல், அறிவியல்பூர்வமான வரலாற்று உண்மைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும். இல்லையேல், நாம் வரலாற்றைக் கற்ற மாணவர்களை அல்லாமல், மாறாக வரலாற்றால் வஞ்சிக்கப்பட்ட ஒரு கோபக்கார சந்ததியினரையே பார்க்கவேண்டியிருக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை**

**பொருள்:** துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவன்.



# பாடசாலை மாணவர்களுக்கு 'ஏ.ஐ.' தொழில்நுட்பப் பாடம்

**கொழும்பு, பெப்.11**

**எதிர்காலத் தலைமுறையினரைத் தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்தும் நோக்கில், பாடசாலைக் கலைத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.**

எதிர்வரும் கல்வியாண்டு முதல், க.பொ.த. உயர்தரப் பிரிவில் கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளைத் தெரிவுசெய்யும் மாணவர்களுக்கு ஏ.ஐ. பாடம் கட்டாயமாக்கப்படவுள்ளது. அடிப்படை ஏ.ஐ. கோட்பாடுகள், இயந்திரக் கற்றல், தரவு அறிவியல் மற்றும் நெறிமுறை சார்ந்த ஏ.ஐ. பயன்பாடுகள் ஆகியவை பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ளன. இந்தப் புதிய பாடங்களைக் கற்பிப்பதற்காக, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களைக் கொண்டு பாடசாலை ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ச-இ)



## புற்றுநோய் அபாயம் நாட்டில் அதிகரிப்பு!

நாட்டில் நாளாந்தம் சுமார் 100 புதிய புற்றுநோய் நோயாளிகள் பதிவாகி வருகின்றனர். தினமும் சுமார் 40 பேர் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் எனச் சுகாதாரப் பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தினசரி 15 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களில் மூன்று பேர் உயிரிழக்கின்றனர். இதைத் தடுக்கும் வகையில், 20 வயதுக்குப் பிறகு பெண்கள் மாதந்தோறும் சுய மார்பகப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும். 20 முதல் 40 வயதினருக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறையும், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருடத்துக்கு ஒருமுறையும் மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டும் - என்றார். (ச-

## டித்வா பேரிடர் மீட்புப் பணி அதிகாரபூர்வமாக நிறுத்தம்


டித்வா பேரிடரைத் தொடர்ந்து காணாமல் போயிருந்த நபர்களைத் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் அதிகாரபூர்வமாக நிறுத்தியுள்ளனர்.

பேரிடரில் 173 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி தெரிவித்துள்ளார். டித்வா சூறாவளி தாக்கி இரண்டு மாதங் களுக்கும் மேலாகிவிட்டதால் மீட்புப் பணிகள் நிறுத்தப்பட் டுள்ளன தற்போதைய நெறிமுறைகளின்கீழ் மேலும் தேடுதல் நடவடிக்கைகள் தேவையற்றவை. ஆயினும் டித்வா பேரிடரால் காணாமற்போனவர்கள் இறந்ததாக அறிவிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ஜனாதிபதி நிதிய நிர்வாக சபைக்கூட்டம்

கொழும்பு,பெப்.11

ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாகசபை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது. இந்த நிர்வாகசபை, ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி செயலாளர் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 7 உறுப்பினர்களைக் கொண்டது. (எ)



## 9,480 டெங்குத்தொற்றாளர்கள் அடையாளம்

நாட்டில் டெங்குக் காய்ச்சல் அபாயம் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்போதைய நிலைவரப்படி, நாடு முழுவதும் 9ஆயிரத்து 480 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 51.3 சதவீதமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். இதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார். (ச-இ)

**நாளை**
வியாழக்கிழமை - தை 29
12.02.2026
சுபநேரம் : 08.04 - 09.34
ராகுகாலம் : 02.04 - 03.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு அரசால் கூடுதல் நிதியொதுக்கீடு

## முன்மொழிவுகளைத் தயாரிக்குமாறு வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.11

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் விசேட பணிப்புரைக்கமைவாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் துரித அபிவிருத்திக்கெனத் தனியாக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப் படவுள்ளது. அதைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை உடனடியாகத் தயாரிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில், மாகாண உயர் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அரிய வாய்ப்பை எமது மாகாணத்தின் வளர்ச்சிக்காக நாம் சரியாகப்பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வடக்கு மாகாணசபையால் ஏற்கனவே 32 மிகப் பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுத் தயார் நிலையிலுள்ளன. இந்தத் திட்டங்களைத் தற்போதைய சூழல் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப மீள் பரிசீலனை செய்து, உடனடியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திட்டங்கள் மாகாணத்தின் பொருளாதாரத்தை உயர்த்தக் கூடியதாக இருக்கவேண்டும். எமது மாகாண இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களாக அவை அமையவேண்டும். மாவட்ட ரீதியாக மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதை உறுதிசெய்யவேண்டும். வெறுமனே கட்டடங்களைக் கட்டுவதைவிட, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நீண்டகாலத் திட்டங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார். (ச-27)

# மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுதல் மாட்டிறைச்சிக்கு விலை நிர்ணயம்

மன்னார்,பெப்.11

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களிலும், நேற்று முதல் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மட்டுமே இறைச்சியை விற்பனை செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் மாட்டிறைச்சியின் நிர்ணய விலை தொடர்பான விசேட கலந்துரையாடல், மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மாவட்டத்தில் மன்னார் நகரசபை, மன்னார் பிரதேசசபை, மாந்தை மேற்குப் பிரதேசசபை, நானாட்டான் பிரதேசசபை மற்றும் முசலிப் பிரதேசசபை ஆகிய 5 உள்ளூராட்சிசபைப் பிரிவுகளிலும், நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ தனி இறைச்சி 2 ஆயிரத்து 200 ரூபாவுக்கும், ஒரு கிலோ முள் இறைச்சி 2 ஆயிரம் ரூபாவுக்கும் அதில் (200 கிராம் முள்ளும், 800 கிராம் இறைச்சியும்), ஒரு கிலோ தனி முள் ஆயிரத்து 200 ரூபாவுக்கும், ஒரு கிலோ ஈரல் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும். இந்தக் கலந்துரையாடலில் பிரதேசசபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள்,வருமான வரிப்பரிசோதகர், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், மாட்டிறைச்சிக் குத்தகைக் கடை உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)

# பட்டதாரிகள் நியமனத்தில் புறக்கணிக்கப்படும் கிழக்கு

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.11

பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அந்தச் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிவித்ததாவது-

இந்த ஆண்டில் அரசாங்கத்தால் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் அனைத்து மாகாணத்தையும் எடுத்து நோக்கும்போது கிழக்கு மாகாணம் மாத்திரம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த அறிக்கையின்படி கிழக்கு மாகாணத்தில் அதிகளவான பாடநெறிகள் தவிர்க்கப்பட்டு மிகவும் குறைந்தளவிலான பாடநெறிகளே அதிலும் கலைப்பாடங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டே இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நாங்கள் விசேட சலுகைகள் எவையும் கேட்கவில்லை. போட்டிப் பரீட்சைகளுக்கான வாய்ப்புகளையே தருமாறு கேட்கின்றோம்-என்றனர். (ச-இ)

# சனிப்பெயர்ச்சி மகா ஹோமம்

யாழ்ப்பாணம், பெப்.11

சனீஸ்வரப்பெயர்ச்சி மகா ஹோமம் பருத்தித்துறை சிவன் கோவிலில் எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் சனீஸ்வர கிரகநிலை மாற்றம் அன்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி 26 நிமிடத்தில் இடம்பெறும். சனீஸ்வர பகவானின் கிரகநிலை மாற்றத்தின் போது, சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டி அன்றைய தினம் காலை 7 மணி தொடக்கம் அபிசேகம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-100)

# மெய்வல்லுநர் போட்டி

கொடிகாமம், பெப்.11

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியால யத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் பாடசாலை மைதானத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தாபன மற்றும் பொதுமுகாமைத்துவப் பிரிதிக் கல்விப் பணிப்பாளர் இ.அபிராமியும், கௌரவ விருந்தினராக பளை ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர் ஏ.வி.எம். மிறாஜ்ஜும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஏ-41-159)

# விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.11

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கல்லூரி மைதானத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் ரி.லோகராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் எம்.கோணேஸ்வரன் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சத்திரசிகிச்சைக்கு 2 இலட்சம் ரூபா உதவி

சாவகச்சேரி,பெப்.11

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து, இருதய சத்திரசிகிச்சைக்கான, ஏழாவது கொடுப்பனவாக 2 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை பிரதேச செயலரால் நேற்று வழங்கப்பட்டது. நாவற்குழி மேற்கைச் சேர்ந்த நோயாளியின் இருதய சத்திரசிகிச்சைக்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (க-9)

# பரசூட் முறை நெற்செய்கை அறுவடை விழா

கிளிநொச்சி,பெப்.11

களை நெல் கட்டுப்படுத்தல் மற்றும் அதிக விளைச்சல் தரும் பரசூட் முறையில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட, வயல் அறுவடை விழா உருத்திரபுரம் பொறிக்கடவை அம்மன் ஆலயத்துக்கு அருகில் கு.விநாயகமூர்த்தி என்ற விவசாயின் வயலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. உருத்திரபுரம் விவசாயப்போதனாசிரியர் நா.மகராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி கமநல அபிவிருத்தித் திணைக்களப் பிரதி ஆணையாளர் பா.தேவரதன், நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையப் பிரதிப்பணிப்பாளர் இ.சஞ்சீவன், கிளிநொச்சி கிழக்குப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ், வடமாகாண மேலதிக விவசாயப்பணிப்பாளர் த.யோகேஸ்வரன் மற்றும் பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், உருத்திரபுரம் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு வெறும் பகற்கனவு

## விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, பெப்.11

தற்போதைய அரசின் காலத்தில் புதிய அரசியலமைப்பு உருவாகாது. அது வெறும் கனவு மட்டுமே என முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் என்றும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்றும் அந்தக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசு அதிகாரத்துக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ளபோதிலும், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்து அரசியல் தரப்பில் விவாதங்கள் எழுந்துள்ளன.

அரசு முதலில் புதிய அரசியலமைப்பை உருவாக்கவேண்டுமானால், அதற்கான ஆரம்பகட்டப் பணிகளைத் தொடங்க வேண்டும். ஆனால், இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை. இப்படியான அரசு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரும் என்று எப்படி நம்பமுடியும்? அதனால்தான் இது வெறும் கனவு என்று நான் கூறுகின்றேன் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



# இலங்கையில் ஓமான் போர்க்கப்பல்

கொழும்பு, பெப்.11

ரோயல் ஓமான் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று இன்று விநியோக மற்றும் சேவைக்காக இலங்கை வந்தடைந்தது. இலங்கைக் கடற்படை கொழும்புத் துறைமுகத்தில் கடற்படையினர் மரபுகளுக்கு ஏற்ப கப்பலை வரவேற்றனர்.

போர்க்கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், அதன் அங்கத்துவக் குழுவினர்கள் கொழும்புப் பகுதியில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 19 . 03 . 1985



கண் நெகிழ 11 . 02 . 2007

அமரர். செல்வன்
**பத்மகாந்தன் சஞ்ஸீத்**

(பழைய மாணவன் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மாணவன் - S.S.M பொறியியல் கல்லூரி சேலம் - இந்தியா)

நீ இருந்த காலம் எல்லாம் மகிழ்வான காலமானதுவே !
நீ இல்லாத காலமது இருள் சூழ்ந்த காலங்களானதுவே !
நாமிங்கு கண்ணீரோடு வழிகடந்து செல்கின்றோம் !
எமது கண்கள் இங்கே உன்முகத்தை தேடுதையா !
உன் நினைவு அலைகள் நாளாந்தம் கண்ணீராய் ஓடுகின்றதே ஐயா !

"புனித வாசம்"
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்

CS/60697) J-1

# மணமகள் தேவை

யாழ் இந்து (V), 59 வயது கனடா பிரஜாவுரிமை உள்ள விவாகரத்துப்பெற்ற, பிள்ளைகள் அற்ற, டாக்டர் (MBBS) மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை. சீதனம் தேவையில்லை.

(CS/60702) J-1

**T.P: 077 539 9328**

# EDU CO Tution Centre

ஆங்கிலம் தரம் 1 - தரம் 5 வரை
இரண்டாம் மொழி சிங்களம்
தரம் 6 - O/L வரை
பிரத்தியேக வகுப்புகள்.

(CS/60710) J-1

தொடர்புகளுக்கு:-
**T.P: 076 525 3411**

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : கனகரத்தினம் சுயராஜ் பெண் ஹர்சினி
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் :சொந்தக்காரர்
ஆதன இல - 1552 வீதி - பொன்னாலை பருத்தித்துறை வீதி வட்டாரம் -01

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01 பொன்னாலை பருத்தித்துறை வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. ஆதனம் பிரசித்த நொத்தாரிசு ஆ.பொன்னம்பலம் முகதாவில் 4739/27.10.1918 திகதிய நன்கொடை உறுதிப்படி சுப்பர் பெண் தில்லைச்சி என்பவர்களுக்கு சொந்தமாகியது. அவர் காலம் சென்றமையால் அவரது மகன்களான சுப்பர் சுவாமிநாதருக்கும் சுப்பர் தம்புவிற்கும் மாதாவழி முதுசமாக வந்தடைந்து எனவும் அவர்களும் காலம்சென்றுவிட சுவாமிநாதரின் ஏக புத்திரியாகிய சிவகாமிக்கும் தம்புவின் ஏக புத்திரனான குணரத்தினத்திற்கும் பெற்றோர் வழி முதுசமாக வந்தடைந்தது எனவும் பிரசித்த நொத்தரிசு இ.த அன்ரன் பாலசிங்கம் முகதாவில் 4792/30.09.2014திகதிய உறுதிமூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு நாகலிங்கம் அரியபுத்திரன் முகதாவில் 1849/29.12.2014 திகதிய அறுதி உறுதி மூலம் கனகரத்தினம் சுயராஜ் உம் பெண் ஹர்சினிக்கும் சொந்தமாகியது. மேற்படி ஆதனத்திற்கு பிரசித்த நொத்தாரிசு சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 6903/18.09.2025 திகதிய உறுதிப்படுத்தல் உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் அளந்து வரைந்த 5919 ம் இலக்க 2024.03.04 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு இருபத்திரண்டு (22) குளி மூன்று தசம் ஐந்து இரண்டு (3.52) ஆக காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிதென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை "ஆலடிப்புலம்" நிலப்பரப்பு 22 குளி 3.53 ஆகும்.

இதன் எல்லைகள்
கிழக்கு :- மிகுதி ஆதனம்
வடக்கு :- பொன்னாலை பருத்தித்துறை வீதி
மேற்கு :- காஞ்சிபுரம் வீதி
தெற்கு :- சாமிநாதர் சிறீவள்ளலின் ஆதனம்

இவ்வாதனத்தை கனகரத்தினம் சுயராஜ் உம் பெண் ஹர்சினியும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் கனகரத்தினம் சுயராஜ் பெண் ஹர்சினி என்பவர்களின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(CS/60708) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 06 . 1947



மறைவு 08 . 02 . 2026

## முருகேசம்பிள்ளை பரஞ்சோதி

(முன்னாள் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை உப அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர், இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் தரம் -I)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் ஆயிலியை வதிவிடமாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை பரஞ்சோதி அவர்கள் கடந்த (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் சௌபாக்கியவதி தம்பதியரின் மருமகனும், சோதியாம்பாளின் கணவரும், சோதிகரன், ஸ்வர்ணசோதி, மாதங்கி ஆகியோரின் தந்தையும், சகீலா, மதனரூபன், கௌசிகன் ஆகியோரின் மாமனாரும், பாலசுப்ரமணியம், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, குணரட்ணம் மற்றும் விசயரத்தினம், ஜெகசோதி, பாலச்சந்திரன், ஆனந்தகுமாரசாமி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பாக்கியவதி, புஸ்பலீலா, இந்திராணி, சர்வேஸ்வரி, மீனாம்பிகை, யசோதா, கிருஸ்ணகுமாரி, கோகிலராசா, காலஞ்சென்ற நடனாம்பாள், பரமராசா, நந்தினி, உமாதேவி, சந்திரேஸ்வரன், ஆகியோரின் மைத்துனரும், அக்ஷரன், ஆருத்திரா, ஆதிரன், ஆதர்ஷன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2026) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆயிலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்

(CS- 60704 ) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவை சேனாதிராசாவுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

கிளிநொச்சி, பெப்.11
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, 'மாவை தமிழரின் சரித்திரம்' எனும் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள கே.கே. மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் தலைவர் இளையதம்பி விஜயசிங்கம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சுடர் ஏற்றப்பட்டு, மாவை சேனாதிராசாவின் உருவப்படத்துக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பூநகரிப் பிரதேசசபையின் தவிசாளர் சிவகுமார் ஸ்ரீரஞ்சன், கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் ஆகியோர் தொடக்கவுரைகளை நிகழ்த்தினர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியல்துறைப் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் மாவை சேனாதிராசா தொடர்பான நினைவுரையை ஆற்றினார். (க-66)



# ஈழத்துச்சிறுமி டிலாஜினி தமிழ்நாட்டில் சாதனை

தமிழ்நாடு, பெப்.11
தமிழ்நாடு தஞ்சாவூரில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் மாநில அளவில் நடத்தப்பட்ட 50 மீற்றர் நீச்சல் போட்டியில், ஈழத்தமிழ்ச் சிறுமி ஜெ.டிலாஜினி 3 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்று சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துள்ளார்.
வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயக்குமார் அருள்ஜோதி தம்பதியரின் பிள்ளைகளான தனுஜா, டிலாஜினி ஆகிய இருவரும் நீச்சல் போட்டிகளில் அபாரத் திறமையை வெளிப்படுத்தி சாதனைகளைப் படைத்து வருகின்றனர். (க-100)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்டப்போட்டி கடந்த வாரம் இடம்பெற்றது. (க-17)



# மகா சிவராத்திரியை முன்னிட்டு கேதீச்சரம் நோக்கி பாயாத்திரை

யாழ்ப்பாணம், பெப்.11
மகா சிவராத்திரியை முன்னிட்டு, திருக்கேதீச்சர ஆலயம் நோக்கிய பாதயாத்திரை, தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.
ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளில், பாதயாத்திரைக்கு எடுத்துச்செல்லும் வேல், சூலம் என்பன வைத்துச் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து உலக சைவத்திருச்சபையின் தலைவர் சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கதிர்குமாரசுவாமி சுமூகலிங்கம் சிவாச்சாரியார் பாதயாத்திரையை ஆரம்பித்துவைத்தார்.
சிவலிங்கப்பெருமானுடன் கூடிய அலங்கரிக்கப்பட்ட ஊர்தியைத் தாங்கிய சிவனடியார்களின் அரோகராக் கோஷங்களுடன் தெய்வீகப் பஜனைப் பாடல்கள் பாடியவாறு யாத்திரை ஆரம்பமானது. பாதயாத்திரை சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சென்றடைந்து, அங்கு வழிபாட்டிடத்தில் வேல், சூலம் என்பன வைக்கப்பட்டு வழிபாடு இடம்பெற்றது. பாதயாத்திரைக்குழுவினர் தொடர்ச்சியாகப் பல இந்து ஆலயங்களைத் தரிசித்தவாறு, எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருக்கேதீச்சரம் ஆலயத்தைச் சென்றடையவுள்ளனர். உலக சைவத்திருச்சபை, திருக்கேதீச்சரம் திருத்தலப் பாதயாத்திரிகர்கள் சேவா சங்கம் இணைந்து இந்தப் பாதயாத்திரையை ஏற்பாடு செய்துள்ளன. (க-66)

# தண்டிகையில் எழுந்தருளிய கீரிமலை நகுலேஸ்வரர்

யாழ்ப்பாணம், பெப்.11
வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் எட்டாம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான், விநாயகப்பெருமான், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் அடியவர்கள் புடைசூழ அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் வெளிவீதியில் உலா வந்தனர். (எ-41-66)







# திருப்பாலத்துவ சபை தினம்

மன்னார், பெப்.11
கத்தோலிக்க திருஅவையில் பரிசுத்த பாப்பரசரின் கீழ் இயங்கிவரும் திருப்பாலத்துவ சபையின் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சகல மறைமாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டது.
மன்னார் மறைமாவட்டத்தின் ஜோசப்வாஸ் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருப்பாலத்துவ சபை தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நற்கருணை ஆண்டவர் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி ம.ஜெயபாலன் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குநரும் அன்பிய இயக்குநருமான அருட்பணி ஆர்.நீக்கலஸ் அடிகளாரும், கார்மேல் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி அபிஷேகாவும், அருட்சகோதரர் ஜோர்ஜும் கலந்துகொண்டனர்.
ஆலய முன்றலில் திருப்பாலத்துவ சபை கொடி ஏற்றப்பட்டு திருப்பாலத்துவ சபை சிறுவர்கள், அருட்பணியாளர்கள் மற்றும் இறைமக்கள் சகிதம் பவனியாக ஆலயத்தில் வரவழைக்கப்பட்டதுடன் மங்கல விளக்கு ஏற்றப்பட்டு தொடர்ந்து திருப்பலி ஆரம்பமாகியது.
திருப்பலியின் நிறைவில் திருப்பாலத்துவ சபை தினத்தை முன்னிட்டு 'தூய ஆவியின் அடையாளங்கள்' எனும் கருப்பொருளில் நடத்தப்பட்ட ஓவியப்போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-41-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

11.02.2026
புதன்கிழமை

# புதன் பொய்கை

கவிதை என்பது பேசும் ஓவியம்.
-எமெர்சன்



# தூரிகை ஓவியங்களால் காவியம் செய்த ரமணி!

● எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி
விரிவுரையாளர்.
மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி.

ஈழத்து இலக்கியப் பரப்பிலும் கலை உலகிலும் 'ரமணி' என்ற பெயர் வெறும் பெயரல்ல; அது ஒரு தனித்துவமான கலைப் பாணி. தனது தூரிகை முனையால் ஈழத்து மண்ணின் யதார்த்தங்களையும், இலக்கியப் பாத்திரங்களையும் உயிருள்ள ஓவியங்களாக மாற்றிய ஓவியர் ரமணி (வைத்தீஸ்வரன் சிவசுப்பிரமணியம்), கடந்த 2025 டிசம்பர் 29 அன்று தனது தூரிகைப் பயணத்தை முடித்துக்கொண்டு நிலையான புகழுக்குச் சென்றார்.

### அளவெட்டியில் அரும்பிய கலை

1942 ஓகஸ்ட் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்த ரமணி, மாணவனாக இருக்கும்போதே தனது கலைத் திறமையை வெளிப்படுத்தியவர். மொழி அரசி அச்சகத்துக்காக அவர் வரைந்த 'வாழைமரம்' என்ற ஓவியமே அவரது முதல் படைப்பு. கொழும்பு அரச நுண்கலைக் கல்லூரியின் 'முறைசார்ந்த பயிற்சி, அவரது தூரிகைக்கு உலகத்தரம் வாய்ந்த கூர்மையைக் கொடுத்தது.

### சிலையாகச் செதுக்கிய வரலாறு

- ரமணி அவர்கள் வெறும் ஓவியர் மட்டுமல்ல, தத்ரூபமான சிலைகளை வடிப்பதிலும் வல்லவர்.
- 1974இல் உரும்பிராயில் அமைக்கப்பட்ட சிவகுமாரன் சிலை.
- 1990இல் வல்வெட்டித்துறை தீருவிலில் வடிக்கப்பட்ட தீருவில் நினைவுச்சின்னம், மற்றும் பல்வேறு பாடசாலை நிறுவுநர்கள், சைவப் பெரியார்களின் சிலைகள் இன்றும் அவரது கைவண்ணத்துக்குச் சாட்சிகளாக உயர்ந்து நிற்கின்றன.

### இலக்கியப் பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்தவர்

ரமணி அவர்களின் ஓவியங்கள் வெறும் சித்திரங்கள் அல்ல; அவை கதைகள் சொல்லும் காவியங்கள். செங்கை ஆழியான், டொமினிக் ஜீவா, தெணியான், செம்பியன் செல்வன் என ஈழத்தின் ஆளுமைமிக்க எழுத்தாளர்களின் நூல்களுக்கு அவர் வரைந்த அட்டைப் படங்களும் விளக்கப்படங்களும் அந்த நூல்களுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தன. ஒரு எழுத்தாளர் ஒரு பாத்திரத்தைப் படைக்கிறார் என்றால், ரமணி அந்தப் பாத்திரத்தின் உணர்வுகளை உள்வாங்கி, அந்தப் பாத்திரத்தை வாசகர்களின் கண்முன்னே உலவ விடுபவர்.

"புத்தக அட்டை வடிவமைப்பில் ரமணி செய்த புதிய சோதனைகள், தமிழ் நூல்களின் தரத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தியது."






### அங்கீகரிக்கப்பட்ட ஆளுமை

கலிபோர்னியா பேஸ் (Pace) பல்கலைக்கழகத்தில் ஆசியக் கலைஞர்களின் கண்காட்சியில் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றமை இவரது கலைக்குக் கிடைத்த சர்வதேச அங்கீகாரமாகும். அதேநேரம், நீண்டகாலக் குறையாக இருந்த ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களின் வரலாற்றைப் பாடப்புத்தகங்களில் சேர்க்கும் முயற்சியில், ரமணி அவர்களின் பெயரும் அவரது அட்டைப் பட ஓவியங்களும் க.பொ.த (சாதாரண தர) பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டமை அவருக்குக் கிடைத்த ஆகச் சிறந்த கௌரவமாகும்.

### பண்பு நலன்களும் பணியும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும், வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றிய அவர், பல இளம் கலைஞர்களை உருவாக்கினார். எவ்வளவு புகழுக்கும் உயர்வுக்கும் மத்தியிலும், சிரித்த முகம் மாறாத பண்பாளராகவும், நேர்மைமிக்க மனிதராகவும் அவர் திகழ்ந்தமை கலையுலகுக்கு ஒரு முன்னுதாரணம்.

வண்ணங்களால் வையகத்தை அளந்த ரமணி போன்ற கலைஞர்கள் மீண்டும் பிறக்கப்போவதில்லை. அவர் விட்டுச்சென்ற தூரிகையின் தடங்கள் ஈழத்து ஓவிய வரலாற்றில் என்றென்றும் அழியாதவை. அந்த மகா கலைஞனின் ஆக்கங்களைப் பாதுகாப்பதும், அவரது பாணியைப் பின்பற்றி புதிய தலைமுறைக் கலைஞர்கள் உருவாவதுமே நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்றுப்போக்கும் குழந்தைகளின் சாவும்:



## தடுப்பது எப்படி?

**மருத்துவர் பா.சயந்தன்**
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை

வயிற்றுப்போக்கு குழந்தைகளில் பொதுவான நோயாக இருந்தாலும் சரியான நேரத்தில் கவனிக்கப்படாவிட்டால் உயிரிழப்புக்கும் காரணமாகலாம். குறிப்பாக ஐந்து வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளில் வயிற்றுப்போக்கால் ஏற்படும் மரணங்களுக்கு முக்கியமான காரணம் உடல் நீர் குறைதல் ஆகும். ஆனால் பெரும்பாலான இந்த மரணங்களை வீட்டிலேயே செய்யக் கூடிய எளிய முதலுதவி முறைகள் மூலம் தடுக்கமுடியும்.

வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்துவதற்கான முதன்மையான நடவடிக்கை உடல் நீர் குறைவைக் கட்டுப்படுத்துதல் தான். வயிற்றுப்போக்கு தொடங்கிய உடனே உப்புச் சர்க்கரைக் கரைசல் எனப்படும் 'oral rehydration solution (ORS)'கொடுக்கத் தொடங்கவேண்டும். சிறு சிறு அளவில் அடிக்கடி கொடுக்கவேண்டும். வாந்தி ஏற்பட்டாலும் ORS கொடுப்பதை நிறுத்தக்கூடாது. சில நிமிடங்கள் இடைவெளி வைத்து மீண்டும் தொடங்கலாம். சரியான முறையில் ORS கொடுக்கப்பட்டால் பெரும்பாலான குழந்தைகள் மருத்துவமனை செல்லாமலேயே குணமடைவார்கள்.

தாய்ப்பாலையும் இலகுவாக ஜீரணமாகக்கூடிய உணவுகளையும் நிறுத்தக் கூடாது.வயிற்றுப்போக்கு இருந்தாலும் தாய்ப்பால் தொடர்ந்து கொடுக்கவேண்டும். உணவை நிறுத்துவது குழந்தையை மேலும் சோர்வடையச் செய்து நோய் தீவிரமடையச் செய்யும். சாதம் கஞ்சி இட்லி, தயிர் போன்ற எளிதில் ஜீரணமாகும் உணவுகளைக் குறைந்த அளவில் அடிக்கடி கொடுக்கலாம்.

**சிங்க் ( Zinc) மருந்தின் முக்கியத்துவம்**

சிங்க் மருந்து வயிற்றுப்போக்கின் காலத்தைக் குறைக்கிறது. மீண்டும் வயிற்றுப்போக்கு வருவதையும் குறைக்க உதவுகிறது. பத்து முதல் பதினான்கு நாட்கள் தொடர்ந்து சிங்க் கொடுக்கவேண்டும். ஆறு மாதத்துக்குக் குறைவான குழந்தைகளுக்கு தினமும் பத்து மில்லிகிராம் அளவும் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தினமும் இருபது மில்லிகிராம் அளவும் பரிந்துரைக்கப்படுகிறது.

**தேவையற்ற மருந்துகளைத் தவிர்த்தல்**

மருத்துவர் ஆலோசனை இல்லாமல் அன்ரிபயோட்டிக் மருந்துகளைக் கொடுக்கக் கூடாது. குழந்தைகளுக்கு மலம் நிறுத்தும் மருந்துகள் ஆபத்தானவை. சரியான ORS தாய்ப்பால் உணவு மற்றும் சிங்க் மருந்தே வயிற்றுப்போக்குக்கான முக்கியமான சிகிச்சையாகும்.

**தடுப்பூசிகளின் பங்கு**

ரோட்டா வைரஸ் தடுப்பூசி கடுமையான வயிற்றுப்போக்கைத் தடுக்க உதவுகிறது. தேசிய தடுப்பூசித் திட்டத்தின்படி சரியான நேரத்தில் அனைத்துத் தடுப்பூசிகளும் பெற்றுக் கொடுக்கப்படவேண்டும்.

**சுத்தம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

சோப்புடன் கை கழுவும் பழக்கம் உணவுக்கு முன்பும் கழிப்பறை பயன்படுத்திய பின்பும் கடைப்பிடிக்கவேண்டும். சுத்தமான குடிநீரை மட்டும் பயன்படுத்தவேண்டும். சமைத்த உணவுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். பால் போத்தல்கள், கரண்டிகள் மற்றும் பாத்திரங்களை நன்றாக சுத்தம் செய்யவேண்டும்.

வயிற்றுப்போக்கால் குழந்தைகள் மரணிக்கவேண்டிய அவசியமே இல்லை. சரியான நேரத்தில் ORS கொடுத்தல் தாய்ப்பால் மற்றும் உணவைத் தொடர்தல் சிங்க் மருந்து வழங்கல் மற்றும் தேவையான போது உடனடி மருத்துவ ஆலோசனை பெறுதல் ஆகியவை குழந்தையின் உயிரைக் காக்கும் முக்கியமான நடவடிக்கைகள் ஆகும். பெற்றோரின் விழிப்புணர்வே குழந்தையின் பாதுகாப்பாகும்.

### ஆபத்தான அறிகுறிகள்

குழந்தை மிகவும் சோர்வாக இருப்பது தூக்கத்தில் இருந்து எழமுடியாத நிலை கண்கள் உள்ளே போவது கண்ணீர் வராமை, வாய் மிகவும் உலர்ந்திருத்தல், எட்டு முதல் பன்னிரண்டு மணி நேரம் சிறுநீர் வராமை, மலத்தில் இரத்தம், தொடர்ந்து வாந்தி அல்லது குடிக்க முடியாத நிலை ஆகியவை இருந்தால் உடனடியாகக் குழந்தையைப் பெற்றோர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இந்த அறிகுறிகளை தாமதமாகக் கவனிப்பதே பல குழந்தை மரணங்களுக்குக் காரணமாகிறது.

## தாரிகா

அல்லிலே மலரும் மல்லிகை தானோ
அந்தியில் வந்தாடும் தென்றலும் தானோ
அதிகாலை பூத்திடும் கமலத்தின் இதழோ அவள்
அதரங்கள் சிந்திடும் தேனினை தானோ

வெண்மணல் கொஞ்சிடும் பாதங்களை அவள்
மெல்ல அசைந்திடும் தேரினைப் போல
துள்ளித் திரிகையில் ஒரு முயல்குட்டி போல
அள்ளி அணைக்கையில்
அஞ்சுகச் சிணுங்கலில்

அவள் தூங்கிடும் வேளையில்
அதிகாலைகள் அழகே
அவள் சிரித்திடும் போதிலே
சிரித்திடும் உலகே
நடமாடித் திரியும் வண்ணத்துப் பூச்சி
எனக்கேயான பூக்களின் தொட்டி

சந்தனக் கிண்ணங்கள் அவளிரு கன்னங்கள்
கலையது சொல்லிடும் அவளிரு கண்கள்
சிரித்துக் கொண்டே ஓடி வருகின்ற
என் சின்ன மகளின் அழகோ அழகேஅழகே

**பாலாஜினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிய சிந்தனையின்பால் ஈர்க்கப்படும்

● ஆனையூர்க் கவிராயர்

# வீரிய நல்லாட்சியும் தேசத்தின் மீட்சியும்

குறிப்பாக இலங்கையர்கள் இந்த விடயத்தில் விற்பன்னர்களாகத் திகழ்கின்றனர். அநேகமாக நேரிய சிந்தனை கொண்ட மக்கள் இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில், குறிப்பாக அந்நியராட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில் மிகக்குறைந்த விழுக்காடாகவே காணப்படுகின்றனர். இதற்குக் காரணமாக குடும்பங்களின் வறுமை, உரிய கல்வியறிவின்மை, சமூகமட்டத்தில் நேரிய சிந்தனைகளை வேரூன்றவிடாது தடுக்கும் நடத்தை முதலியவற்றைக் குறிப்பிடலாம். இதனைவிட மக்கள் மனங்களில் முளைவிடக்கூடிய நேரிய சிந்தனைக் கருவூலங்களை முளையிலேயே கிள்ளி எறிந்து விடக்கூடிய அரசியல் காரணிகளின் பல நூற்றாண்டு கால வளர்ச்சியையும் இங்கு குறிப்பிட வேண்டும். இது பல்வேறு அரசியல் அறிஞர்களால் அவதானிக்கப்பட்ட விடயமொன்றாகும்.

இந்த விடயத்தின் ஆழ்ந்த பரிமாணத்தை நாம் ஆய்வியல் அணுகுமுறையில் இனங்காணவேண்டும். உண்மையில் அமைதியாக இயங்கும் ஒரு நாட்டின் மீது அந்நியர் படையெடுக்கும் போது, அது மனித மனங்களின் உறுதித்தன்மையைப் பாதிக்கும் விடயமாகவே அமைகின்றது. எமது நாட்டின் மீதான பண்டைய தமிழக அரசர்களின் படையெடுப்புகள், அதற்குப் பின்னரான ஐரோப்பியர்களின் படையெடுப்புகள், ஆட்சிமாற்றங்கள் எல்லாம் எமது நாட்டில் வாழ்ந்திருக்கக்கூடிய பல்வேறு இனமதக் குழுமத்தினரின் மனங்களில் பெருந்தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கும். இந்த மனோநிலை தேசிய ரீதியில் பரந்து ஒவ்வொரு இலங்கைக் குடிமகனையும் ஆட்கொண்டிருக்கக்கூடும். அந்த மனநிலை தற்கால ஆட்சியாளர்கள் அரசியல்வாதிகள் மனங்களிலும் தவிர்க்கமுடியாத நீட்சியாகத் தொடர்ந்து வந்துள்ளதென்றே கொள்ளவேண்டியுள்ளது. ஆதலால் அரசியலின் பயனான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியோ, அல்லது உச்சபயனான அமைச்சுப் பதவியோ, அதியுச்ச பதவியொன்றோ கிடைக்கும் போது, அந்தப் பதவிகளை அதீத பணம் சுரக்கும் பொருண்மிய ஊற்றுகளாக மாற்றுவதே அந்தப் பதவிகளின் தலையாய நோக்கமென வரித்துக்கொண்டு விடுவதுபோலவே தோன்றுகின்றது. இதனால் ஒரு கை தேசமக்கள் சேவையும் மறுகை ஊழலுமான நிலையே எமது ஆட்சியாளர்களின் 'அறிவிக்கப்படாத' கொள்கையாக இருந்து வந்துள்ளது.

### அரிதான மாற்றம்

நேரியசிந்தனை மிக்கவர்களைப் பெரிதும் கொண்ட, மேலைத்தேய ஆட்சிகளுக்கு நிகரான ஒரு செங்கோலாட்சி

உய்வதனைத்துக்கும் ஒன்றான தெய்வத்தன்மை அதி மானுடத் தன்மை கொண்டதாக இவ்வுலகம் மேலோங்குமாயின் உலகமே பேரன்பு சுரக்கும் ஓரின்ப வீடாக இந்தப் பிரபஞ்சத்தில் இயங்கமுடியும். ஆனால் ஆசையும், ஆணவமும், அதீத பணமோகமும், உணர்ச்சி வேகமும் மிக்கவர்களாகவே மக்கள் வாழ்கின்றனர்.

முதனமுறையாக எமது நாட்டில பதாற்றம் பெற்றதாக நம்பிக்கை கொள்ள இடமுண்டு. நேரிய சிந்தனை குன்றிய நாட்டிலிருந்து, நேரியசிந்தனை அருகிய ஊழல் மனோநிலைகள் பெருகிய அரசியல் சூழலிலிருந்து, இத்தகைய அரசாங்கம் தோற்றம் பெறுவதும் அது நீடித்து நிலைப்பதும் பெரும் சவாலான விடயமென்பது பேருண்மை.

இலங்கைத்தீவில் கல்வி, பொருளாதாரச் சீர்திருத்தங்களுடன் உற்பத்திப் பொருளாதார வளர்ச்சி, உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு, அரச ஏற்றுமதித்துறை சார்ந்து கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தல் முதலாய பொருண்மியக் காரணிகளில் இந்த அரசாங்கம் தீவிர கவனம் கொள்ள வேண்டும். இந்த அரசாங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் குறுக்குவழிப் பொருளாதார அலைகளால் அடித்துச செல்லப்படாதவர்களாகத் தம்மைத் தற்காத்துக் கொள்ளவேண்டும். 'அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி' என்ற முதுமொழிக்கு ஏற்ப ஆட்சியாளர்களின் நேரிய சிந்தனையின் நீட்சியே மக்கள் மத்தியில் பெரும் மனமாற்றத்தைப் படிப்படியாகத் தோற்றுவிக்க முடியும்.

தனிமனித நீதி, சமூகநீதி, அரசநீதி என நீதியின் பரிமாணங்கள் ஒவ்வொன்றும் சுயாதீனமான இயங்குதிறன் கொண்டதாக அரசியலமைப்பின் வகைகூறும் தன்மையதாக இருக்க வேண்டும். நேரியசிந்தனையானது ஒரு நாட்டின் முதற்குடிமகன் முதல் சாதாரண குடியானவன் வரை விரிந்து வியாபித்து வளர்ச்சியுற வேண்டும். அதேநேரம் தலைமைத்துவக் கண்காணிப்பும் தலைமைத்துவ விசுவாசமும் மேலோங்க வேண்டும். எல்லாவற்றிலும் மேலாக நம்நாடு பல்லின மக்கள் வாழும் நாடு என்பதால், மதரீதியான இனரீதியான மேலாதிக்க சிந்தனையற்ற சிறுபான்மையினரையும் அரவணைத்து அவர்தம் உரிமைகளையும் மதித்து ஆட்சிபுரியும் ஒரு தூய அரசியல் ஒழுங்கமைவு உருவாகவேண்டும். இது மிகவும் கடினமான விடயம். ஏனெனில் இது தெற்கின் அரசியல் தளத்தில் காலம் காலமாக ஊறிப் போன விடயம். இந்த நிலையில் எமது தமிழ்த்தரப்பு அரசியல்வாதிகளும் தூய அரசியல் மக்கள்நல சேவையினை இயங்குதளம் ஒன்றை ஏகோபித்து உருவாக்கவேண்டும். வாக்குகளைக் கவர்ந்திழுக்கும் மந்திர வலையாகவும், சுயநலமே அவர்களது மெய்நிலையாகவும் பார்க்கப்படாத அளவிற்குத் தம்மை நேரிய சிந்தனையாளர்களாக நிலைநிறுத்தி, கட்சிபேதங்கள் கடந்த தமிழினத்தின்
அரசியல் விடிவை நோக்கி விரிந்த ஓர் நடை போடுபவர்களாக தகவமைக்க வேண்டும்.

பல நூற்றண்டுகளாக வளர்ச்சியுற்ற ஒரு பொதுமனநிலைக்கு, அத்தகைய நிலையை ஏற்படுத்திய அரசியல்வாதிகளின் பொது இயக்கப்பாட்டுக்கு மாறான நேரிய ஆட்சியை வழங்குவோம் என உறுதிகூறி தம்மை ஏற்கெனவே புனிதர்களாக இனங்காட்டியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியது. ஒரு நல்லாட்சி என்பது பெயரளவில் அல்லாது செயலுருவில் அதன் நோக்க இயங்குதிறன் குன்றாது அல்லது மாறுபடாது நல்லாட்சிக்கு வரைவிலக்கணமாக இயங்குமாயின், அந்த ஆட்சிக்கு ஆளுங்கட்சியோ அன்றி எதிர்க்கட்சியோ நாட்டின் எந்தவொரு குடிமகனோ தனது பூரண ஆதரவை வழங்குவதானது நேரிய சிந்தனை நோக்கி வளர்ச்சியுறும் ஒரு நாட்டின் நல்லறிகுறியாகும்.

### எதிர்க்கட்சிகளின் அறம்

அரசாங்கத்தின் தவறான, மக்கள் விரோத ஆட்சியை நாட்டுக்குத் தீங்கான மோசமான கேடு விளைவிக்கக்கூடிய வெளிவிவகாரக் கொள்கைகளை இனங்கண்டு எதிர்க்கட்சிகள் எதிர்வினைகளை மேற்கொள்ளலாம். மக்களை அணிதிரட்டலாம். அதைவிடுத்து ஆட்சிசெய்யத் தெரியாதவர்கள், ஆட்சி அனுபவமற்றவர்கள் எனத் தூற்றுவதும், இந்த அரசாங்கம் இன்று கவிழும், நாளை கவிழும் என்று கனவு காண்பதும் முறையான அரசியல் அறமாகாது. அரசாங்கத்தை மாற்றும் சக்தி மக்களுக்கே உரியது. அதனை மக்கள் பார்த்துக் கொள்வார்கள். ஏற்கெனவே நாட்டுமக்களுக்கு அந்த அனுபவம் உண்டு.

நாட்டின் அனைத்து இனத்தொகுதியினரும், மதவகுதியினரும் என அனைத்து இலங்கைக் குடிமக்களும் நாட்டை நேசித்து பொருளாதார மீட்சிப்பயணத்தில் ஒன்றிணையவேண்டும். இந்த மீட்சிப் பயணமானது அனைத்து இனமத மக்களையும் இதயசுத்தியடன் அரவணைத்து ஒரு தேசிய நலனார்ந்த சிந்தனையுடன் இயங்க வேண்டிய பெரும் பொறுப்பை அரசுக்கு வலியுறுத்துகின்றது. முற்றிலும் களங்கமற்ற ஒரு நேரிய பற்றுறுதியுடன் இயங்கும் அரசாங்கத்தின் செயலியக்கம் நாட்டின் அரசியலில் பெரும் திருப்புமுனையாக அமையும். இத்தகு தடம்மாறாத தொடரொழுங்கில் ஆட்சிபுரிந்து இருண்மயமான நாட்டினைப் பொருண்மிய மேம்பாட்டின் உச்சநிலைக்கு உயர்த்திச் செல்வதே மக்களின் ஆணையாகும்.'



## மழை கண்ணீரில் ஈழ மண்ணின் துயர்

வானம் உடைந்து விழும் இரவில்,
இலங்கை தன் இதயத்தை மூடிக்
கொண்டது,
மழை கண்ணீராகி
மண்ணின் நெஞ்சில்
வெள்ளமாய் வழிந்தது.

பச்சை மலைகள் நடுங்கின,
வேர்களை இழந்த மரங்கள்
மௌனமாய் சரிந்தன,
பூமி தன் தாய்மையை
ஒரு கணம் மறந்தது.

ஆறுகள் தன் பெயரை மறந்து,
எல்லைகளை கிழித்தன,
மனிதன் வரைந்த
வாழ்க்கைக் கோடுகள்
ஒரே இரவில் அழிந்தன.

சேற்றில் சிக்கிய
ஒரு குழந்தையின் கைகள்,
"அம்மா" எனும்
ஒரே சொல்லைத் தவிர
வேறெதையும் அறியவில்லை.

வீடுகள் மிதந்தன,
நினைவுகள் மூழ்கின,
திருவிழாக்களின் சிரிப்பு
இப்போது
வெள்ளத்தின் கூச்சலாய்.

தீபம் ஏந்திய
ஒரு தாய்,
மழையோடு போராடி,
இருளிலும்
நம்பிக்கையைக் காத்தாள்.

பள்ளி வாசல்களில்
மிதக்கும் புத்தகங்கள்,
எதிர்காலம் கூட
இன்று
உதவி கேட்கும் காட்சி.

கல்லறைகள் வரை
வெள்ளம் வந்தது,
உயிரும் மரணமும்
ஒரே திசையில்
அடித்துச் செல்லப்பட்டன.

இலங்கை அழுகிறது,
ஆனால் உடையவில்லை,
ஒவ்வொரு கண்ணீரிலும்
ஒரு மீட்பு கனவு
முளைக்கிறது.

இந்த மழை—
அழிவின் பாடல் என்றாலும்,
நாளை
இதே மண்
மறுபடியும் எழும்.
வேண்டாம் இவ்வழிவு மீண்டும்.,

● தாங்கராசா டனுசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# இலங்கையின் கல்விமுறைமையில் புதிய சீர்திருத்தம்



## அமுலுக்கு வரும் புதிய நடைமுறைகள்

***(நாட்டின் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் மறுசீரமைத்து வருகின்றது. ஒவ்வொரு தரத்திலும் எவ்வாறான மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் நன்மை என்ன என்பது தொடர்பில், உதயன் புதன்பொய்கை வார இதழில் கடந்த இரு வாரங்களாக வெளியான கட்டுரையே இது.)***

**○ யோ.அ.தவநாயகம்**

சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் இரண்டாம் கட்டத்தில் (தரம் 12, 13) ஐந்து சிறப்புக் பாடத்துறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 1. விஞ்ஞானம், 2.தொழிநுட்பம் முகாமைத்துவம், 3.முயற்சியாண்மை, 4.மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானம் 5.தொழிற்கல்வி ஆகியனவே அவையாம். மாணவர் தமது விருப்பிற்கேற்ப ஒரு சிறப்புத் துறையைத் தெரிவுசெய்து அந்தத் துறைசார்ந்த மூன்று பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

மேலும் மேலதிக கற்றலுக்காக அதே சிறப்புத் துறையிலிருந்து சிறப்புப்பாடங்களாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதான மூன்று பாடங்களைத் தவிர்த்து, ஏனைய பாடங்களிலிருந்து வளமாக்கல் மொடியூல்களை தெரிவுசெய்தல் வேண்டும். மற்றும் இடைநிலைத் தொகுதி மொடியூல்களுக்காக தெரிவு செய்த சிறப்புத் துறையைத் தவிர்த்து ஏனைய துறைகளிலிருந்து பாடங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும். அத்துடன் அனைத்துத் துறையினருக்கும் கட்டாயமானதாக பொது ஆங்கிலம் மற்றும் பொதுத்தொழிநுட்பம் ஆகியன உள்ளன. பொதுப்பரீட்சை எவ்வாறு அமையும்? பல்கலைக்கழக அனுமதியில் எத்தகைய மாற்றங்கள் இடம்பெறும்? பாடசாலை மட்டத்திலான மதிப்பீடுகள் எத்தகைய கவனத்தைப் பெறும்? போன்ற விளக்கங்கள் எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம். 2030ஆம் ஆண்டில் இந்தக் கலைத்திட்டம் அமுலாகத் தொடங்கும். 2031ஆம் ஆண்டில் முதலாவது பொதுப்பரீட்சை நடைபெறும்.

இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையானது பாடசாலை மட்டம், தேசிய மட்டம் ஆகிய இரு நிலைகளில் இடம்பெறும். ஆரம்பப் பிரிவினைப் பொறுத்த வரையில் பாடசாலை மட்டத்தில் செயற்பாடு அடிப்படையிலானதும், தரவிளக்கம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கனிஷ்ட இடைநிலை மற்றும் சிரேஷ்ட இடைநிலைத் தரங்களில் பாடசாலை மட்டம், தேசியமட்டம் ஆகிய இருநிலைகளிலும் மதிப்பிட்டுச் செயன்முறை நடைபெறும். பாடசாலை மட்டத்தில் மொடியூல் அடிப்படையிலான கணிப்பீடுகள் கற்றல் கற்பித்தற் செயன்முறையுடன் இணைந்த வகையில் இடம்பெறும். ஒவ்வொரு மொடியூலுக்கும் இரண்டு தொடர் மதிப்பீடுகள் 70 வீதத்துக்கும், இறுதி மதிப்பீடு 30 வீதத்துக்குமாக அமையும். பாடசாலை மட்டத்தில் எந்தளவுக்கு இந்தச் செயன்முறை வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படும் என்பதிலேயே இதன்வெற்றி தங்கியுள்ளது. பாடசாலை மட்ட மதிப்பீட்டுப் புள்ளிகள் மொத்தப் புள்ளிச் சராசரி முறையில் அறிக்கை செய்யப்படும். இந்தப் பெறுபேறுகளுக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்தளவுக்கு மேலதிககற்றல் மற்றும் நிலைமாற்றுத்திறனுக்கான கற்றல் என்பனவும் வலுப்பெறும். தேசிய மட்டத்திலான மதிப்பீடுகள் தரம் 9, தரம் 11, தரம் 13 இன் இறுதியில் நடைபெறும். இப்பரீட்சைப் பெறுபேறுகள் சர்வதேச தரங்களுடன் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்பில் மேற்கொள்ளப்படும். இக்கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் அதிபர் ஆசிரியர்களைப் பயிற்சியளித்தல் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தியாக்கல், மானியங்களை வழங்குதல் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையை வலுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை சமகாலத்தில் மேற்கொள்வதும் அவசியமாகவுள்ளது. புதிய பாடங்கள், கணிப்பீட்டு செயற்பாடுகள், மொடியூல் பயன்பாட்டுக்கு வழிப்படுத்தல் தொடர்பாக அதிபர் ஆசிரியர்களுக்குப் போதிய பயற்சியளித்தல் அவசியமாகின்றது. சில புதிய பாடங்களுக்கு பொருத்தமான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறையை ஏதிர்கொள்ளவேண்டிய நிலையும் கூட ஏற்படலாம். பொருத்தமான பாடங்களுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

மேலும் இந்தச் சீர்திருத்தம் தொடர்பில் பாடங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை, வகுப்பறை மட்டச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை காரணமாக பாடவேளைக்கான நேரத்தை ஒரு மணித்தியாலமாக அதிகரிக்க வேண்டியது அவசியமாகவிருந்த போதும் கல்வி அமைச்சு உடனடி இடர்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கில் பாடவேளையை ஐம்பது நிமிட வேளையாக மாற்றியுள்ளது. அத்துடன் நாளாந்தம் ஏழு பாடங்கள் நடைபெறுவதுடன் பாடசாலை நேரத்தினை அரை மணித்தியாலத்தால் நீடிக்க வகை செய்யப்பட்டுள்ளது (தற்போது தற்காலிகமாக நேரமாற்றம் நிறுத்தப்பட்டுள்ளது). இந்தக் கலைத்திட்ட அமுலாக்கத்துக்கு இது போதுமான அதிகரிப்பாக அமையாது என்றும் இருநேர பாடசாலை முறையை நடைமுறைப்படுத்தல் பொருத்தமாக அமையும் என்ற கருத்து இன்று கல்வியாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இதில் மாற்றங்கள் நிகழலாம். ஆக, இந்தக் கல்விச் சீர்திருத்ததின் வினைத்திறன் மிக்க பயணத்திலேயே எமது நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

*(முற்றும்)*

# யாழ்ப்பாணத்துக்கு தூரமில்லை!

**சிங்களத்தில் காஸ்யப்ப சத்தியப்ரிய டி சில்வா**
**தமிழில் இப்னு அஸ_மத்**

மணித்தியாலத்திற்கு நூறு கிலோ மீற்றர்
வேகத்தில் சென்றிட வேண்டும்
யாழ்ப்பாணத்துக்கு

ஆமை வேகத்தில் கழிந்திட்ட
கடந்த நாற்பது வருடங்களில்
மீதப்படுத்தி இருப்பது
நினைவுகளின் சிதைவுகளை மட்டுந்தானா?
மரணத்தின் சாம்பர் தூசுகளை மட்டுந்தானா?

இங்குதான் இடம்
'அ" 'ஆ" கூறிய


அங்குதான் நாங்கள் தங்கியிருந்த வீடு, வாசல் ...
இன்னும் அங்கு இருக்கிறார்களா,
பார்வதி, நடேசன், சரஸ்வதி,
கல்யாணி, பார்திபன் எல்லோரும்?

யார் சொன்னது
நீங்கள் தொலைவில,; நான் அருகில் என?
பார்க்கப் போனால் எவரும் தொலைவில் இல்லை
சிறியதொரு நாட்டில் இடத்திற்கிடம் ...

செல்ல வேண்டும்
மணித்தியாலத்திற்கு நூறு கிலோ மீற்றர்
வேகத்திலேயே யாழ்ப்பாணத்துக்கு!

நாற்பது வருடங்களுக்கு முன்னர்
மனதில் எஞ்சிய நிழல்கள்
மெலிந்து, வெளுத்து மரணித்திட முன்பாக ...

பேக்கரி அருகில் நின்றிட வேண்டும்
மாத்தறை சாப்பாட்டுக் கடையில்
சோறு சாப்பிட வேண்டும்
தோசை, சாம்பாருடன் மசாலா வடையை
வாழை இலையில் வைத்து பிசைந்து
விழுங்கிட வேண்டும்



பனஞ் சக்கரை, ஒடியல்
நன்கு காய்ந்த கருவாடு பொன்றவற்றை
பொதி செய்து கொள்ள வேண்டும்

ஏன், நான் வித்தியாசமானவனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் ஒழிப்புத் தரவரிசையில் இலங்கை சிறிது முன்னேற்றம்

**கொழும்பு, பெப்.11**
**அரச துறையில் நிலவும் ஊழல் தொடர்பான உலகளாவிய தரவரிசையில் இலங்கை ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்று டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.**

இந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள 2025ஆம் ஆண்டுக்கான புதிய ஊழல் மதிப்பாய்வுச் சுட்டி தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டில் இலங்கை 35 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இது 2024ஆம் ஆண்டு பெற்ற புள்ளிகளை விடவும் 3 புள்ளிகள் உயர்வாகும். கடந்த 10 ஆண்டுகளாக 121ஆவது இடத்தில் இருந்த இலங்கை, தற்போது 182 நாடுகளில் 107ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.


இலங்கையின் இந்தச் சிறு முன்னேற்றம், அண்மையில் கொண்டுவரப்பட்ட புதிய ஊழல் எதிர்ப்பு மற்றும் சொத்து மீட்புச் சட்டங்கள் மற்றும் சட்ட நடைமுறையாக்க வழிமுறைகளை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்டுள்ளது. (எ-இ)

# 'சிம் அட்டை' விநியோகத்துக்கு விரைவில் புதிய விதிமுறைகள்

கொழும்பு, பெப்.11
2019ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட கைபேசி சிம் அட்டைகளை மீள்பதிவு செய்யவும், சிம் அட்டை விநியோகத்தில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள 2019.8.2 அன்று வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அதற்குப் பின்னர் பெறப்பட்ட சிம் அட்டைகளுக்கு மட்டுமே பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட பல சந்தாதாரர்களின் முழுமையான தகவல்கள் தொலைத்தொடர்பு நிறுவனங்களிடம் இல்லாததால் குற்றச்செயல்கள் தொடர்பான சட்டப் புலனாய்வுகளின்போது சரியான தகவல்களைப் பெறுவதற்கு பெரும் தடையாக உள்ளது. அதனால் 2019.8.2 ஆம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட பழைய சிம் அட்டைகளின் உரிமையாளர் தகவல்கள் மீண்டும் முறைப்படி பதிவுசெய்யப்படும் என அமைச்சரவை முடிவில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். இதுவரை முறையாக உள்வாங்கப்படாத 16 முதல் 17 வயதுக்கு இடைப்பட்டவர்களைச் சந்தாதாரர்களாகப் பதிவுசெய்யப் புதிய ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு சிம் அட்டைகளை வழங்குவதில் புதிய ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (எ-இ)



# 90 நாள்கள் தடுப்புக்காவலில் 'ஆவாக்குழு' உறுப்பினர்கள்

கொழும்பு, பெப்.11
கொலை வழக்குத் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஆவாக்குழு உறுப்பினர்கள் இருவர் விசாரணைகளுக்காக 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில், 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சம்பவத்தின் பின்னர் நாட்டை விட்டு இந்தியாவுக்கு தப்பிச் சென்ற இந்தச் சந்தேகநபர்கள், அண்மையில் மீண்டும் இலங்கைக்குத் திரும்பியபோது, கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக மத்திய குற்றத் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புகளைப் பேணிவந்ததும், துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்கு ஆள்களை விநியோகிக்கும் சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டமையும் முதற்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# பீடி இலைகள் மீட்பு

கொழும்பு, பெப்.11
மாரவில் கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை கடற்படையினர் நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையில் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 300 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்பரப்பில் கைவிடப்பட்டிருந்த 10 பொதிகளில் இந்த பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. கடற்படையால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்புத் துறைமுகத்தில் உள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# நாடளாவிய சுற்றிவளைப்பில் பலர் கைது

கொழும்பு, பெப்.11
நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சுமார் 30 ஆயிரத்து 31 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 19 பேரும், சந்தேகத்தின் பேரில் 532 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 271 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 151 பேரும், கவனக்குறைவாகவாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 70 சாரதிகளும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 370 சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 5 ஆயிரத்து 106 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# மாற்றுப்பாலின சுற்றுலாத்திட்டம் அனுமதியை மீளப்பெறத் தீர்மானம்

கொழும்பு, பெப்.11
இலங்கையில் மாற்றுப் பாலினத்தவர் சமூகத்தை இலக்கு வைத்து சுற்றுலா மேம்பாட்டுத் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரால் வெளியிடப்பட்ட கடிதம் மீளப்பெறப்படுகின்றது என்று சட்டமா அதிபர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தைச் செல்லுபடியற்றதாக்கவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரது தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்கி விடுக்கப்பட்ட கடிதத்தை நீக்குவதற்கு சுற்றுலாத்துறை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் என்று சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதிநிதி நீதிமன்றில் தெரிவித்துள்ளார். (எ-இ)



# மாகாணசபைத் தேர்தலை அரசு நிச்சயமாக நடத்தாது

*ராஜித சேனாரத்ன தெரிவிப்பு*



மாகாணசபைத் தேர்தலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடத்தாது என அடித்துக் கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன. இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உள்ளாட்சிசபைத் தேர்தலில் அரசாங்கத்துக்குப் பின்னடைவு ஏற்பட்டது. மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசுக்குரிய வாக்குவங்கி மேலும் வீழ்ச்சியடையும். எனவே, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமா என்பது சந்தேகமே. தோல்வியெனத் தெரிந்தும் அதனை எதிர்கொள்வதற்கு ஆளுங்கட்சி முன்வராது என்றே தெரிகின்றது. தேர்தல் ஆணைக்குழு அனுப்பிய கடிதத்துக்குப் பதில் இல்லை. சட்டதிருத்தத்தை மேற்கொள்வதற்கும் ஆளுங்கட்சி முனைப்புக் காட்டவில்லை. இதன்மூலம் தேர்தல் நடக்காது என்பது புலனாகின்றது-என்றார். (எ-44)

# கெஹெலிய வழக்கில் இருவருக்குப் பிணை

கொழும்பு, பெப்.11
தொழிலதிபர் நிமல் சிசிர குமார மற்றும் கெஹெலிய ரம்புக்வெலவின் உறவினரான பண்டார ரம்புக்வெல ஆகியோருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுப் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல சட்டவிரோதமாக சம்பாதித்ததாக கூறப்படும் 740 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதிமோசடிக்கு உதவிய சந்தேகத்தின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இருவராலும் முன்வைக்கப்பட்ட வாதங்களைப் பரிசீலித்த நீதிவான் தலா 5 மில்லியன் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதித்தார். சந்தேகநபர்களுக்குப் பயணத்தடை விதித்ததுடன், கடவுச்சீட்டுகளை நீதிமன்றில் ஒப்படைக்கவும் நீதவான் உத்தரவிட்டார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் பிரிட்டன் பயணம் 'பி' அறிக்கையில் குளறுபடி

## சுகீஸ்வர பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.11

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரிட்டன் பயணம் தொடர்பான வழக்கில் சாட்சியமளித்துள்ள பிரிட்டன் தூதரகத்தின் முன்னாள் அதிகாரி அருணபுஸ்ப சோமசிறி பெர்னாண்டோவின் 'பி' அறிக்கை உண்மைக்குப் புறம்பானது என முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் செயலாளர் சுகீஸ்வர பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளதாவது–

பிரித்தானியத் தூதரகத்தின் முன்னாள் அதிகாரி அருண புஸ்ப சோமசிறி பெர்னாண்டோவின் 'பி' அறிக்கையில் ரணில் விக்ரமசிங்கவின் பிரிட்டன் பயணத்தின்போது, தங்கியிருந்த இடத்தில் 'பொய்லர்' பழுதடைந்திருந்தது என்றும், அதைச் சரிசெய்ய 15,000 பவுண் கேட்கப்பட்டதாகவும் அதைத் தான் கொடுக்கவில்லை எனவும் ஆனால் ஜனாதிபதியின் பயணத்துக்கு 45,000 பவுண் வழங்கப்பட்டது என்றும் அதைத் தனது மனச்சாட்சிக்கு உட்பட்டு வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க பிரிட்டன் சென்றிருந்த செப்ரெம்பர் 11 முதல் 31 வரையிலான காலப்பகுதியில், அங்கு நிலவிய வெப்பநிலை 24 பாகை செல்சியஸ் ஆகும். பிரிட்டனில் நவம்பர் மாதமே கடும் குளிர் தொடங்கும். 24 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவும் செப்ரெம்பர் மாதத்தில் 'பொய்லர்' இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.

நிலவும் காலநிலைக்கு மாறாக, ஒரு பொய்யான காரணத்தைக் கூறி நிதி வழங்கப்பட்டது என்று சாட்சியமளித்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது– என்றார். (ச–இ)


## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், நல்லூரிற்கு அருகாமையில் அமைந்துள்ள 2 அறைகள் கொண்ட வீடு தளபாட வசதிகளுடன் மாணவர்கள், தொழில்புரிபவர்கள், நிறுவன ஊழியர்கள் குழுவாகத் தங்குவதற்கு குறுகிய கால அடிப்படையில் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு -: 0759799161/0778864868

## தவறவிடப்பட்டது

மகேந்திரராஜா சிந்துஜனுடைய பணப்பை நேற்று (10.02.2026) மாட்டீன் வீதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் 42, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வெகுமதி வழங்கப்படும்.

**T.P-074 183 8318**

(CS 31195) A


## 31ம் நினைவு தினமும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடி 16.07.1961

ஆண்டவன் அடி 12.01.2026

கடந்த 12.01.2026 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் தர்மராசா மல்லிகாதேவி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.02.2026) புதன்கிழமை பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.


(தாயில் சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை)

வாமஸ் வீதி, 3ம் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
077 100 2496

(CS 31190) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 12 . 1940

மறைவு 10 . 02 . 2026

**பரமு வினாசித்தம்பி ஐயா (ராசா ஐயா)**

அல்லாரை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு வினாசித்தம்பி (ராசா ஐயா) நேற்று (10.02.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், சிவகுமாரி, சிவபாலன், சிவநந்தினி, சிவமலர், கௌரிபாலன் ஆகியோரின் அன்பு தந்தையாரும், சிவசோதிலிங்கம், மிதுனா, கருணசிங்கம், சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யதுர்சனன், அபிஷனன், சுவதிகன், விதுர்னா, சதுர்சா, ரவிசங்கர், பவித்திரா, கவிசனா, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஷாத்விக்கின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2026) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ந.ப 12.15 மணியளவில் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கௌரிபாலன் - 077 20 73 157
சிவபாலன் - 077 70 39 201

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 47047) A


பிப்ரவரி
15
2026

# இலவச கருத்தரிப்பு ஆலோசனை முகாம்

இடம்:
ரோயல் பிரசாந்த் மருத்துவமனை,
வெள்ளவத்தை, கொழும்பு

நேரம்:
காலை 9.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

குழந்தைப்பேற்றுக்கான அதிநவீன சிகிச்சைகளுடன் தற்போது இலங்கையில்...

RPIFC

## ரோயல் பிரசாந்த் கருத்தரிப்பு மையம்



62, W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை

infosl@prashanthivf.com www.prashanthivf.com



IUI | IVF | ICSI | IMSI

அழைக்கவும்: 0754000012

### பெண்களுக்கு

- PCOD
- எண்டோமெட்ரியோசிஸ் நாரிழைகள், குழாய் அடைப்பு
- ஹிஸ்டராஸ்கோப்பி / 3D லாப்ராஸ்கோப்பி
- எம்பிரியோஸ்கோப்
- எம்பிரியோ க்ளூ
- சைட்டோபிளாஸ்மிக் டிரான்ஸ்பர்
- பிஆர்பி (Platlet rich plasma)
- பிஜிஎஸ் (Pre genetic screeing)

### ஆண்களுக்கு

- விந்தணு பகுப்பாய்வு
- டிஎன்ஏ (DNA) கூறாய்வு
- இம்சி (IMSI)
- அஸ்ஃஸ்பெர்மிக்
- 40x மைக்ரோஸ்கோப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்...

நேற்று நீக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி இந்தப் பயணத்தடை அவருக்கு விதிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில், நீதவான் லெனின்குமார் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவனுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப்பட்டது.

உதயன் குழுமத்தலைவரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திருக்குமரன் முன்னிலையானார்.

மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த அநுர அரசிலும் ஊடகங்கள் மீது அடக்குமுறை தொடர்வதையே இந்தப் பயணத்தடை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## 22 கிலோ...

ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸார் கப் ரக வாகனமொன்றை இடைமறித்துச் சோதனை நடத்தியுள்ளனர். இதன்போதே குறித்த கடத்தல் முறியடிக்கப்பட்டதுடன், சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

மன்னாரில் இருந்து திருகோணமலைக்குக் கடத்தப்பட்ட நிலையிலேயே அந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நகர்வுகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ-ம-110)

## பொலிஸார்...

நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

வேலணை அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார், 1.15 மணியளவில் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் ஹைஏஸ் ஒன்றை இடைமறித்துள்ளனர். அந்த ஹைஏஸ் வாகனம் பொலிஸாரின் உத்தரவுக்குக் கட்டுப்படாமல் வேகமாகப் பயணித்துள்ளது. இதைத் தொடர்ந்தே, பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இதன்போது ஹைஏஸ் வாகனத்தைச் செலுத்திய குறித்த நபர் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், சில நிமிடங்களில் உயிரிழந்தார். சம்பவம் இடம்பெற்ற பகுதியில் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி நளினி சுபாகரன் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் உசைன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

நெற்றியால் சென்ற தோட்டா, மூளையைச் சிதைத்ததைத் தொடர்ந்தே இறப்புச் சம்பவித்ததாக உடற்கூற்றுப் பரிசோதனையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)

## உயர்மட்ட...

அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் நளிந்த தெரிவித்ததாவது:-

பொலிஸாரின் கட்டளையை ஏற்காது, சந்தேகத்துக்கு இடமான வகையிலேயே வாகனம் சென்றுள்ளது. முதலில் வாகனத்தை நோக்கியே சூடு நடத்தப்பட்டுள்ளது. அதற்கும் கட்டுப்படாத நிலையிலேயே அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரும், யாழ். குற்ற விசாரணைப் பிரிவும் இணைந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. வாகனத்துக்குள் என்ன இருந்தது? என்பது உள்ளிட்ட தகவல்கள் பொலிஸ் விசாரணையின் பின்னரே தெரியவரும். மேற்படி இரு விசாரணைகளிலும் திருப்தி இல்லை என உறவினர்கள் கருதினால், அது தொடர்பில் தெரிவிக்கலாம். உயர்மட்ட விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தயார் - என்றார்.

(அ-ம-44)

## சான்றுப்பொருள்கள்...

சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:-

சம்பவத்துடன் தொடர்புடைய ஹைஏஸ் வாகனத்தில் இருந்து பல்வேறுபட்ட சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவை அந்த வாகனத்தில் முன்னர் இருந்திருக்கவில்லை. பொலிஸாரால் திட்டமிட்டு சோடிக்கப்பட்ட விடயங்களாகவே காணப்படுகின்றன. இந்த விடயத்தில் தமது குற்றத்தை மறைப்பதற்காக பொலிஸார் இவ்வாறு செயற்பட்டுள்ளனர்.

அரிவு வெட்டுவதற்காக ஆட்களை ஏற்றச்சென்ற வாகனத்தின் மீதே பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. வாகனத்தை இயக்கிய சிறுவனுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை. அவர் பொலிஸாருக்கு கையூட்டு வழங்கியே வாகனத்தைச் செலுத்தி வந்தார். நேற்று அவரிடம் பணம் இல்லாத காரணத்தால் பொலிஸார் மறித்தும் நிற்காமல் போயுள்ளார். இதற்காகவே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது - என்றனர். (அ-ம-26)

## கிவுல்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது கிவுல்ஓயா திட்டம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் விவசாயத்துக்குரிய நீர்பாசன பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய அத்தியாவசிய வேலைத்திட்டமாகவே கிவுல் ஓயா காணப்படுகின்றது. இது எமது அரசாங்கம் இனங்கண்ட வேலைத்திட்டம் அல்ல. 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவையில் கிவுல்ஓயா திட்டத்தை செயற்படுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது மகாவலி எல் வலயத்துக்குள்ளேயே இருக்கின்றது.

4 வருடங்களுக்குள் திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. கொரோனா, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் கிவுல் ஓயா திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக தேசிய நிதியே பயன்படுத்தப்படும். கிவுல் ஓயா திட்டத்தை 2026ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2030ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். அன்று 4 ஆயிரம் மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டது. தற்போது 23 ஆயிரத்து 456 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது செலவு 6 மடங்காக அதிகரித்துள்ளது. கிவுல் ஓயா திட்டம் இன அடிப்படையில் பயன்படுத்தப்படாது. ஆதலால், இதற்குள் அரசியலைப் புகுத்த வேண்டாம் என்று அனைவரையும் கோருகின்றோம். இந்தத் திட்டத்துக்குள் அரசியல் இல்லை - என்றார்.

(அ-ம-44)

## அல்லைப்பிட்டி...

டிக்கையால் நிகழ்ந்துள்ளது. இந்த மரணத்துக்குப் பொலிஸாரே பொறுப்பேற்க வேண்டும் இவ்வாறு சிரேஷ்ட சட்டத்தரணி சிறீகாந்தா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையில் உள்ளதாவது:-

அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த இளைஞர் சந்தேகத்துக்கு இடமான வகையில் வாகனத்தைச் செலுத்திச் சென்றிருந்தாலும், அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை. தேவைப்பட்டிருப்பின் வாகனத்தின் சக்கரங்களில் மட்டுமே துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்க வேண்டும். இந்த அவலச்சாவு தொடர்பில் விசாரணைகள் முழுமையாக நடத்தப்பட வேண்டும். இளைஞரின் மரணத்துக்குக் காரணமான பொலிஸார் சட்டத்துக்கு முன்னால் நிறுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

(அ-ம-26)

## குமாரபுரம்...

கடைப்பிடிக்கப்படவுள்ளது.

சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிராமத்துக்குள் கடந்த 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதியன்று இராணுவத்தினர் நடத்திய சரமாரித் துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுச் சம்பவங்களால் பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களின் 30ஆவது ஆண்டு நினைவுதினமே இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. (அ-ம-66)

## துப்பாக்கியுடன்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

மருதனார்மடம் சந்தைக்குள் துப்பாக்கியுடன் சென்ற நபரொருவர் சிலரின் பெயரைக்கூறி விசாரித்துள்ளார். அத்துடன் வட்டிக்குப் பணம் கொடுக்கும் செயற்பாடுகள் தொடர்பிலும் அந்த நபர் விசாரித்தார் எனக் கூறப்படுகின்றது. இதனால் பதற்றமடைந்த சந்தை வியாபாரிகள் சுன்னாகம் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துரித விசாரணைகளில் அந்த நபர் கண்டறியப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் அந்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும், அவரிடம் இருந்தது போலித் துப்பாக்கி எனவும் தெரியவந்தது. மருதனார்மடம் சந்தை வியாபாரிகளுக்கும் இது தொடர்பில் பொலிஸாரால் தகவல் வழங்கப்பட்டது. (அ-ம-26-66)

## தலைவர்...

அமைப்பதற்கு, காணியின் உரிமையாளரான பிரபாகரனின் சகோதரி ம.ஜெகதீஸ்வரி அண்மையில் அனுமதிக் கோரிக்கையை விடுத்திருந்தார். இதையடுத்து அவருக்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே, அந்தக் காணியில் அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதே பொருத்தமாக அமையும் என்று வல்வெட்டித்துறை நகரசபை தெரியப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை நகரசபை அனுப்பிவைத்த கடிதத்தில் உள்ளதாவது:

இந்த ஆதனம் வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த பிள்ளையான உங்களுக்கு சீதனமாக வழங்கப்பட்ட ஆதனம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இருந்தாலும் அந்த வீடு இடிக்கப்பட்டு கட்டட இடிபாடுகள் இராணுவ முகாம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

எனவே, பிரபாகரன் வசித்த வீட்டின் அடையாளத்தை அழிக்கும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தேவையுள்ளது. எனவே, அந்தக் காணியில் பிரபாகரன் வாழ்ந்த வீட்டைக் காட்சிப்படுத்தி அமரர்கள் வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் உருவச் சிலைகளை நிறுவி அதை ஓர் அருங்காட்சியகமாக அமைக்க வேண்டும்.

குறித்த ஆதனத்தை நன்கொடையாகவோ அல்லது நீண்டகால குத்தையாகவோ சபைக்குத் தந்தால், சபை அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதேநேரம், தங்களின் காணியில் கட்டுமானத்துக்கு அனுமதி எடுக்கும் உரிமையையும் நாங்கள் மறுக்கவில்லை - என்றுள்ளது.

(அ-ம-26)

## தேரர்கள்...

திருகோணமலை டச்பே கடற்கரையில் அத்துமீறிக் கட்டுமானம் அமைத்து, அதில் புத்தர்சிலையை பிரதிஷ்டை செய்த வழக்கில், 4 தேரர்கள் உள்ளிட்ட 10 பேர் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தால் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்படவுள்ளது. இவ்வாறான நிலையிலேயே அவர்கள் அனைவரையும் பிணையில் விடுவிக்குமாறு வலியுறுத்தி நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(அ-ம-50)

## பேராளர்...

மாகாணத்திலும் வெற்றிபெற்ற பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பல தரப்பினர் இந்தப் பேராளர் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தைப் பாதுகாப்பதில் இந்த அரசும் விதிவிலக்கல்ல!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விசனம்



கொழும்பு,பெப்.11

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் 'எமது வலி தெரியும்' என்று கூறியவர்கள் இன்று ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும் எந்தத் தீர்வும் இன்றி இராணுவத்தைக் காட்டிக்கொடுக்காமல் பாதுகாத்துவருகின்றனர். எமது உறவுகளுக்கான நீதி கிடைக்கும் வரை ஓயாது போராடுவோம் என வடக்குக் கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் சிவாநந்தன் ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

போராட்டக்குழுவில் இருந்து வந்துள்ள அநுர அரசாங்கமும் இன்று போலி நாடகமே ஆடிவருகிறது. 2009ஆம் ஆண்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட மற்றும் சரணடைந்த எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது 16 ஆண்டுகளாகக் கேள்விக்குறியாகவே உள்ளது.

எமது உரிமைகளுக்காக உணர்வுடன் போராடியவர்களைப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்த முடியாது. நாம் ஒற்றுமையுடன் எமது உறவுகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம். வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனைவரும் ஒன்றிணைந்து, எமது உறவுகளுக்கான நீதி கிடைக்கும் வரை ஓயாது போராடுவோம்- என்றார். (ச-56)

# பல தசாப்த கால வாய்ப்பை வீணடித்துள்ளது அரசாங்கம்

## ஹர்ஷ டி சில்வா விமர்சனம்

கொழும்பு, பெப்.11

இந்தியாவுடன் பொருளாதார ரீதியாக இணையக் கிடைத்த பல தசாப்தகால வாய்ப்புகளைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நழுவவிட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதுடில்லியில் கலாநிதி எஸ். ஜெய்சங்கரிடம் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா என்ன சொல்லியிருப்பார் என்று வியக்கிறேன்? உலகின் மிக வேகமாக வளர்ந்துவரும் ஒரு நாடான இந்தியாவுடன் பொருளாதார ரீதியாக ஒன்றிணைவதன் முக்கியத்துவத்தை இப்போதாவது இவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

வெறும் வார்த்தைகளால் பயன் ஏதுமில்லை. அரசாங்கம் எட்கா உடன்படிக்கையை எவ்வளவு விரைவாக முன்னெடுத்துச்செல்லும், இந்தியாவுடனான பண்டங்கள் மற்றும் சேவைகள் வர்த்தகம் எவ்வளவு விரைவாக தாராளமயமாக்கப்படும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்- என்றார். (ஏ-இ)


### வாகனம் தேவை

பட்டா (Badi) வாகனம் Body உடன் மாதாந்த வாடகை அடிப்படையில் தேவை.

தொடர்புகளுக்கு:
076 747 5943, 075 798 2186

(CS/60695) J-1



உரும்பிராய்
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்
### மகாசபை பொதுக்கூட்டம்

எமது ஆலயத்தின் மகாசபை பொதுக்கூட்டம் எதிர்வரும் 15.02.2026ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு எமது ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. தயவு செய்து அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமூகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

பரிபாலன சபை சார்பில்
செயலாளர்.

(CS 31192) A

### பணிப்பெண் தேவை

யாழ் நகரிற்கு அண்மையில் உள்ள வீட்டிற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 50 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 023 7593

(CS/60700) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக $1\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை, நண்ணீர் ஊற்று
- 18 அடி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 074 029 2338
076 990 3039

(CS 31186) A


## மரண அறிவித்தல்



வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை J.P
"சேவைச் செம்மல்"
முன்னாள் வருமான பரிசோதகர்
(நெடுந்தீவு நானாட்டான் பிரதேச சபை, யாழ். மாநகர சபை.
முன்னாள் பிரதேச சபைத் தலைவர் - நெடுந்தீவு.
முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் -
நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு.
முன்னாள் சனசமூக நிலைய செயலாளர் -
நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு.)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இல.72, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த 09.02.2026 திங்கட்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 982 5051

(CS 31194) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
04
11
1935



மறைவு
09
02
2026

நமசிவாயம் சுந்தரமூர்த்தி (விவசாய மன்னன்)

யாழ். கட்டப்பிராயை பிறப்பிடமாகவும், விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சுந்தரமூர்த்தி அவர்கள் கடந்த (09.02.2026) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - புவனம் (இளையாச்சி) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா - பிள்ளையம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கனகபூசணியின் ஆருயிர்க் கணவரும், வரதராஜன் (வரதன்), தனலட்சுமி (தனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுபாமா, புவனேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருகா, ஓவியன், ஓவியா, லக்ஷனா, அக்ஷன், அர்ச்சனா ஆகியோரின் நேசமிகு பேரனும், சிவகடாட்சம் அவர்களின் அன்புச் சகோதரனும், புனிதா, நிலா, சிவகரன் ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும், கனகம்மா, ஜெயலட்சுமி, பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (12.02.2026) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைப்பெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: வரதன் - மகன் (கனடா) - +1 (647) 893 5090
தனம் - மகள் (கனடா) - +1 (647) 444 6595
மனைவி - 077 739 9976
விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.

(CS/60705) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... 361 ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்11.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org